விலை ரூபா 2-00 ★

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

10 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 27 மாசி 27 ஜ-ஆகிர் 17 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (10 – 3 – 85) இதழ் 28

## வன்னிப்பகுதியில் விரைவில் 2 லட்சம் சிங்களவர்!

(கொழும்பு)

''வவனியாவுக்கும் ஆனையிறவுக்கும் இடையில் 2 லட்சம் சிங்கள மக்கள் விரைவில் குடியமர்த்தப் படவுள்ளனர்'' என்று தேசிய பந்தோபஸ்து மந்திரி திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மீரிகமவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (10-ம் பக்கம் பார்க்க)

# இரத்தக்களரியை நிறுத்தக் கோருவாராம் டி. வி.யில் தீவிரவாதத் தலைவர்!

[இ. கந்தசாமி]

மட்டக்களப்பில் கைதான தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகராணுவத் தலைவர் இரத்தினையா கிருஷ்ணமூர்த்தி தான் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு விட்டதாகவும், விரைவில் 'ரூபவாஹினி' தொலைக் காட்சியில் தோன்றி, நாட்டில் இரத்தக் களரியை நிறுத்துமாறு கோரிக்கை விடவுள்ளதாகவும் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இவரும் மற்றும் 7 தமிழ் தீவிரவாதிகளும் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பில் ராணுவ முற்றுகையின்போது பிடிபட்டனர் லெபனுனில் பயிற்சி பெற்ற இவர் முன்னுள் சிறைக்காவலர்.

தற்போது பாதுகாப்புபடையினரின் பாதுகாப்பில் இருக்கும் கிருஷ்ணமூர்த்தி அரசுக்கு தேவையான பல முக்கிய விடயங்களையும் கொடுத்துள்ளாராம்.

கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமது சகாக்கள் பற்றிய விபரம் அவர்கள் இருக்கும் இடங்கள் போன்றவற்றையும் தெரிவித்துள்ளார் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

விரைவில் தொலைக்காட்சி முன் தோன்றவிருக்கும் கிருஷ்ணமூர்த்தி நாட்டின் பிரிவினைக்காக தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள், செய்த குற்றங்கள் அனைத்தையும் ஒப்புக்கொள்ளவுள்ளார் தீவிரவாதிகளை காட்டிக் கொடுத்தோர், சமூக விரோத செயல்களில் ஈடுபட் (10-ம் பக்கம் பார்க்க)

★ சர்வதேசச ட்டநிபுணர்களின் ஆணைக்குழு செயலர் கருத்து

## ராணுவத்தை கட்டுப்படுத்த வேண்டும்!

(சென்னை)

இலங்கையில் ராணுவத்தினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவேண்டும் என்று சர்வதேச சட்டநிபுணர்கள் ஆணைக்குழுவின் தலைமைச் செயலர் திரு. நியால் மெட்டோமட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ராணுவத்தினரின் நடவடிக்கைகள் அங்குள்ள தமிழ்மக்களை அந்நியராக்குகிறது என்றும் அவர் குற்றம் சுமத்தினுர்.

சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணைக்குழுவின் இந்தியப்பிரதிநிதியான திரு. ஜி. எஸ்திலோன் இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதால் தமிழ் அகதிசள் இந்தியாவிற்கு வருவது அதிகரித்திருப்பதாக ஆணைக்குழுவுக்கு தெரி (10-ம் பக்கம் பார்க்க

அன்னையர் முன்னணி செய்தி

## கொடூர அடக்குமுறைக்கு பரிகாரம் வேண்டும்!

(யாழ்ப்பாணம்)

''சிறுபான்மைச் சமூகத்தினர்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கொடூரமான அடக்குமுறையினை உடனடியாக நிறுத்துவதற்கான ஓர் உறுதியான நிலைப்பாட்டினை எடுக்குமாறு இத்தினத்தில் இலங்கைப் பெண்களைக் கேட்டுக் கொள்கிறோம்'' என்று அன்னையர் முன்னணி செய்தியொன்றில் தெரிவித்துள்ளது

சர்வதேசப் பெண்கள் தினம் உலகெங்கிலும் கொண்டாடப்பட்டதையொட்டி கொழும்பில் ''பெண்ணின் குரல்'', 'பெண்களுக்கான சமாதானக் குழு'', ''பெண்கள் செயற் குழு'' ஆகியன ஒன்றிணைந்து 'தேசிய இனப்பிரச்னையை சமாதான முறையில் தீர்ப்பது' என்ற பொருள்பற்றிய ஒரு கருத்தரங்கும் 'டிமெல்' பார்க்கிலிருந்து புதிய மண்டபம் வரை ஒரு ஊர்வலமும் நடக்கவிருந்தது.

அன்னையர் முன்னணி உறுப் (10ம் பக்கம் பார்க்க)

மன்னர் மாவட்டத்தில்

## குருமனைகளிலிருந்து பங்குத்தந்தைகள் வெளியேறி விட்டனர்!

(யாழ்ப்பாணம்)

மன்னர் மறை மாவட்டத்தின் பங்குகளின் பங்குத் தந்தையர்கள் பாதுகாப்பு நோக்கத்திற்காகக் குரு மனைகளிலிருந்து வெளியேறிவிட்டனர்

கடந்த ஜனவரி 6ம் திகதி வங்காலைப் பங்குத்தந்தை மேரி பஸ்ரியன் அடிகள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே பங்குத் தந்தையர்கள் வெளியேறியதாகக் கத்தோலிக்க வார ஏடு தெரிவிக்கிறது.

மன்னர் மாவட்டத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ் மக்கள் தமது கிராமங்களையும், வீடுகளையும்விட்டுப் புறப்பட்டு காடுகளில் ஒழிந்துள்ளனர்; அல்லது தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும் அந்த ஏட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

தலைமன்னர், பேசாலை, தாழ்வுபாடு என்னும் கிராம மக்கள் ஏறக்குறைய அனைவருமே தமிழ்நாட்டிற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். மன்னர், பள்ளிமுனை, அடம்பன், ஆட்காட்டிவெளி என்னும் பங்குகளைச் சேர்ந்த மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளனர் என்றும் அவ்வேடு கூறுகிறது. (மா)

# இலங்கைத்தமிழர் பிரச்னையை தீர்க்கமுயன்ற உலகத் தலைவி!

[சென்னை]

''இலங்கையின் தமிழர் பிரச்னை தமிழ்நாட்டின் தனிப் பிரச்னை அல்ல. அது முழு இந்தியாவினதும் பொது பிரச்னையாகுமெனக் குறிப்பிட்டு அப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்த மாபெரும் உலகத் தலைவி திருமதி இந்திரா காந்தி'' என்று தமிழ்நாடு செய்தி ஒலிபரப்பு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் குறிப்பிட்டார்.

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தமிழ்நாடு சட்டப் பேரவையின்இருசபைகளிலும் நேற்று இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சட்ட மேலவையில் நடைபெற்ற இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையிலேயே அமைச்சர் வீரப்பன் இவ்வாறு குறிப்பிட்டார்.

''இலங்கைத் தமிழர் பிரச்னையை தீர்ப்பதற்கு இந்திய மட்டத்தில் நடவடிக்கை எடுத்ததோடு ஐக்கிய நாடுகள்சபையிலும் குரல் எழுப்பி இலங்கைத் தமிழர் பிரச்னை ஓர் சர்வதேசப்பிரச்னை என்பதனை உலகுக்கு எடுத்துக் காட்டிய தலைவி திருமதி இந்திரா காந்தியாவர்'' என்றும் அவர் தெரிவித்தார், மேலவையில் இத்தீர்மானம் மீது மேலவைத் [10ம் பக்கம் பார்க்க]

ஈ. பி. ஆர். எல். எவ். உரிமை கோருகிறது

## கிளிநொச்சியில் வெற்றிகரத் தாக்குதல்!

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி பொலிஸ் இராணுவ கூட்டுமுகாம் மீது வெற்றிகரமான தாக்குதல் நடாத்தியதாக 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்)வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப் பட்டுள்ளது

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 28ம் திகதி இரவுஒரு மணிக்குகூட்டுமுகாம்ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையால் வெற்கரமாகத் தாக்கப்பட்டது இம்முகாமில் 80ராணுவம், 40 ஆதிரடிப் படை, 20 பொலிசார்என 150 அரசபடை இருந்தனர். ராணுவத்துக்கும் மக்கள் விடுதலைப் படைக்கும் 5மணி நேரத்துக்கு மேலான கடுஞ்சமரில் 75க்கு மேற்பட்ட ராணுவம், பொலிஸ் கொல்லப் பட்டதுடன் 25க்கு மேற்பட்டோர் படுகாயமுற்றனர். அத்துடன் இக்கூடடு முகாமின்பல (10ம் பக்கம பார்க்க)

மட்டுநகரில் அமைச்சர் லலித்

## சரணடைந்தால் மன்னிப்பு!

(இரா. உதயகுமார்)

ஆயுதப் படையினரின் தேடுதல் வேட்டைக்குப் பயந்து மறைந்து வாழும் இளைஞர்கள் அரசாங்கத்திடம் குறிப்பிட்ட கால காலத்தில் சரணடைந்தால், துரித விசாரணையின் பின்பு மன்னிப்பு வழங்கப்பட்டு பெற்றேர் உத்தரவாதத்துடன் விடுதலை செய்யப் படுவார்கள் இதற்கான அறிவித்தல் விரைவில் வெளியிடப் படும்.

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி கடந்த வெள்ளிக்கிழமை கல்குடா வாடி [10ம் பக்கம் பார்க்க]

உலக சாம்பியன் கிரிக்கெட்:

## இன்று இறுதியாட்டம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் உலக சாம்பியன் கிரிக்கெட்போட்டியின் இறுதியாட்டம்இன்றுமெல்போர்ன்மைதா (10-ம் பக்கம் பார்க்க)

## கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பிரஜைகள்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்ற கொள்ளை, தாக்குதல் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பிரஜைகள் குழுக் கூட்டம் குழுத்தலைவர் திரு சி. அல்பிரட் தலைமையில் மல்லாகம் புதுமைமாதா ஆலயத்தில் நடைபெற்றது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினுல் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

நாவலடி ஒழுங்கையில் சகல வசதியுடன் ஏறக்குறைய 3 பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு: தொடர்புகொள்ளவும்: சு கந்தையா நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். 2158

யாழ்.பிரவுண்ரோட்டில் வீடு கட்டக்கூடிய (இருபக்க மதில் எல்லையுடன்) 03 பரப்புகாணி நல்ல சுற்றுடலில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே கந்தப்பு, மாப்பானவூரி, காரைநகர். 2154

எம்மிடம் தரமான (குரங்கு வால்) பயித்தம் விதைகள் தொகையாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு . உண்டு. கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும் J. S. செல்வரத்தினம், பலாலி வீதி, கோண்டாவில். 2162

நல்லூர் செட்டித்தெருவில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: ச. கனகரத்தினம், மெய்கண்டான் வீதி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. 2114

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ஒரு பரப்பில் புதிய வீடு நல்லதண்ணீர் மின்சாரம் வசதியுடன் விற்பனைக்குண்டு: துர்க்காஸ், 185/1, கில்னர் லேன், கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 2166

கொக்குவில் மேற்கு வைத்திலிங்கம் லேனில் நல்ல தண்ணீர் வசதியுடன் வெறும் காணி 2½ பரப்பு விற்பனைக்குண்டு- துர்க்காஸ், 130, K.K.S.ரோட், யாழ்ப்பாணம். 2165

ஆதிகாலத்து மிகவும் பலமான பெரிய ஒரு மரப்பெட்டகம் விற்பனைக்குண்டு வே சச்சிதானந்தம், தெல்லி என்ஜினியரிங்குக்கு எதிராக கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை. 2168

தாவடிச்சந்தியிலிருந்து மானிப்பாய்ரோட்டில் 500யார் தொலைவில் 100யார் ஒழுங்கை முகப்பாகவும், பாடசாலை ஒழுங்கையுடன் இணைந்ததும் பிரிக்கப்பட்டதுமான 19 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வரைபடத்தையும் விபரங்களையும் அறியவேண்டிய முகவரிகள்: 257, K. K. S. ரோட்டில் அமைந்துள்ள கடை, Proctor நவரெத்தினம், கொக்குவில் மேற்கு, CIEKO தாவடிச் சந்தி. 2148

நல்ல மரத்திலான Pantry Cup Boards புதிய Kenwood Belling 4 Burners Ovan Vespa Scooter PX150 Dressing Table 2-In-I Radios விற்பனைக்குண்டு. தொடர்பு; எ. ச. ஜெறி, 53/1, ரெம்பிள் ரோட் யாழ்ப்பாணம். 2196

Wasa Basin, Commerd, 5'X3'' அளவுடைய கதவு நிலைகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு; தி. குகபாலன், 84, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 2199

அல்சேஷன் குட்டிகள் Pure Breed ஒரு மாதம் விற்பனைக்கு. (Old No) 181, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2193

## வகுப்பு

108 Brown Road Jaffna 86 A/L ''வெப்ப இரசாயனம்'' ஆரம்பம்; 12-03-85 6-30 A. M, செவ், வியா, வெள்ளி, 6-30 A. M. ஆசிரியர்: சத்தீஸ். 2198

## தேவை

யாழ், மாநகரசபை எல்லைக்குள் நல்ல தொழிலில் மாதம் 1600 ரூபாவிற்குமேல் சம்பளம் பெறும் 30 வயதுள்ள இந்து வேளாள விஞ்ஞானப் பட்டதாரிப் பெண்ணிற்கு பொருத்தமான படித்த மணமகன் தேவை. சீதனமாக யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல தளவாடங்களும் கொண்ட புதிய வீடும், நகையும் பணமாக ஒரு லட்சம் ரூபா மட்டிலும் கொடுக்கப்படும். எல்லா விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 2062, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழப்பாணம். 2062

பிரபல சைவ ஹோட்டல் ஒன்றிற்கு சமையல், இடியப்பம் தோசை, ரீமேக்கர், சப்ளை, செய்வதற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் உடன்தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். அம்பலவாணர் அன் சன்ஸ், 196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2189

வெளிநாட்டு ஏற்றுமதிக்கு பப்பாசி, கொய்யா, எலுமிச்சை வகை, வெண்கடுகு, வத்தகை, பூசனி, வெண்டி; நன்னாரி, ஆவரசு, பூமரங்கள் விதை தமது வீட்டு தோட்டங்களில் உற்பத்தி செய்வதற்கு எங்களுடன் கூட்டு சேர விரும்புபவர்கள் கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். பதி ஏற்றுமதி விற்பனை கொம்பனி 1ம் மாடி ரோட்டரி, 34, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2190

யாழ். உயர்குல இந்துமத நல்ல நிலைமையிலுள்ள தாயார் தமது 46வயதுடைய, சொத்துகளுக்கு உரித்தான மகனுக்கு 38 வயதுக்குட்பட்ட தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றார். செவ்வாய் 12ஆம் இடத்திலுள்ளது. ஏனைய விபரங்களுடனும், சாதகப்பிரதியுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2100, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2100

## வாடகைக்கு

மூன்று படுக்கைஅறைகளும், சமையலறையும் கொண்ட நவீனவசதிகளையுடைய பகுதி வீடு (Annex) வாடகைக்கு உண்டு. தொடர்பு: 44, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 2194

பலாலி வீதியில் சகல வசதிகளுடனும் நாலு படுக்கை அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு, தொடர்பு 275 (புதியஇலக்கம்) பலாலி வீதி, கந்தர்மடம். 2144

## சோதிடம்

Palmist and Astrologer இராசேந்திரன் ''திருவுளம்'', அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் ரோட், கொக்குவில், பிறநாட்டுப் பயணம், சிறந்ததிருமணப் பொருத்தம், மாணவர் உயர் கல்வி தேர்வு, தொழில்வாய்ப்பு மற்றும் எல்லா தேவைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனை பெற அழைக்கின்றோம். 2181

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

காவலூரில்

## இலக்கியக் கலந்துரையாடல்

(ஊர்காவற்றுறை)

காவலூர் இலக்கிய வட்டத்தின் இலக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ்க் கதைஞர் வட்டத் (தகவம்) தலைவர் வ. இராசையா சிறப்புப் பேச்சாளராக இக் கலந்துரையாடலில் கலந்து கொள்கிறார்.

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்தி சங்கம், சனசமூக நிலையம் மறைந்த அதன் பொதுச்செயலாளர் ஐ. கேசவனுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை அஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்துகின்றது.

## இன்று கொடிநாள்

(வண்ணார்பண்ணை)

சைவச்சிறுவர் இல்ல 10வது ஆண்டு கொடிநாள் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கைதடியில் நடைபெறுகிறது. இத்தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர் பிரிவு சிறுவர் இன்று நல்லூர், திருநெல்வேலி, யாழ். நகர் ஆகிய பகுதிகளில்நிதிசேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கின்றனர்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட (10418) வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் இடதுபக்க மூலையில் ''வெற்றுச்சாக்குக் கேள்வி'' என எழுதப்பட்டு பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15-3-85

பொதுமுகாமையாளர்
சங்கானை
ப நோ. கூ. சங்கம்

8-3-85
சங்கானை. 2200

## கல்வி

Radio and Electronic Engineering. எமது முதல் விளம்பரத்தில் வழங்கப்பட்ட சலுகை 11/3/85-ல் முடிவடைகிறது. வழமையான முறைப்படி சேரும்போது 425/- கட்ட வேண்டும். 200/-பெறுமதியான உதிரிப்பாகங்கள் இலவசம். இருமாத எல்லைக்குள் 300/- கட்ட வேண்டும். தொடர்பு கொள்க: பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 2171

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சி. வ. பொன்னுத்துரை

(முன்னைநாள் புகையிரத நிலைய அதிபர்)

பண்பின் உறைவிடமாய் அன்புக்கு இலக்கணமாய் இருந்த நீங்கள் இவ்வுலகை விட்டு விலகியும் எங்கள் மனதைவிட்டுபிரியவில்லை.

உங்கள் பிரிவால் வாடும்

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
''வசந்தகிரி'' மயிலிட்டி.

2131

## ஓராண்டு நினைவஞ்சலி

### இராமுப்பிள்ளை சின்னப்பு

(ஒப்பந்தகாரர் வவுனியா)



தோற்றம்:
31-10-1911

மறைவு:
20-02-1984

சிறந்த வழிகாட்டியாய், அன்புடன் எம்மையெல்லாம் வாழவைத்த பாசமிகு தந்தையார் நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்று விட்டாலும் உள்ளத்தால் எம்மைவிட்டுப் பிரியாமல் இருந்து எம்மைக்காத்து நல்வழிகாட்டப் பிரார்த்திக்கிறோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

அன்புமிகு
மனைவி பிள்ளைகள்.
2159


## சிக்மா பம்ப்ஸ்

விற்பனை நிலைய இடமாற்ற
அறிவித்தல்

ஓட்டோஸ் கட்டிடம், 190, ஆஸ்பத்திரி வீதியில்
இருந்த எமது விற்பனை நிலயம்
274/1, ஆஸ்பத்திரி வீதிக்கு
(பெரியாஸ்பத்திரிக்கு முன்னால்)
மாற்றப்பட்டுள்ளது என்பதை
அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

நீர் இறைக்கும் இயந்திர பாவனையில்
முன்னணி வகிப்பது

## சிக்மா பம்ப்ஸ்

யுனைரெட் அக்ரோ என்ஜினியரிங்

அலுவலகம்:
274/1, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22747
தொழிற்சாலை: நாவற்குழி, கைதடி.

(2146)

கலர் பிலிம்
சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

# வார மலர்

ஈழநாடு

EELANADU VARAMALAR


அமரர்கள் இந்துபோட் இராசரத்தினம் அவர்களும் வண. பிதா தனிநாயகம் அடிகளும் தமிழ்மொழிக்குத் தொண்டாற்றியவர்கள் இராசரத்தினம் அவர்கள் சைவ சமய அடிப்படையில் கல்விக்கூடங்கள் நிறுவிக் கல்வியின் மூலம் தமிழையும் சமயத்தையும் வளர்த்தார். அடிகளார் அவர்கள் சமயநிலையிலும் சமயத்திற்கு அப்பாலும் நின்று மொழிக்கும் கிறிஸ்தவத்திற்குப் தொண்டாற்றியவர். இவர்கள் தொண்டினைக் கௌரவிக்கும் வகையில் அரசு இவர்களுக்கு முத்திரை வெளியிட்டாலென்ன என்று கருத்துத்தெரிவிக்கின்றார் கட்டுரையாளர். எதிர்வரும் 12-3-85 திகதி இந்துபோட் அவர்களின் நினைவுதினமாகும். அன்று அவர் பிறந்த நூற்றாண்டு நிறைவு தினமுமாகும். [தனிநாயகம் அடிகள் பற்றிய கட்டுரை அடுத்தவாரம் வெளிவரும்.] [ஆ-ர்]

உயர்திரு. சு. இராசரத்தினமவர்கள் சைவ சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. இதே போன்று சுவாமி தனிநாயக அடிகளும் கிறிஸ்தவ சமயத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டினை நாம் மறந்துவிடமுடியாது. மறக்கவும் கூடாது. இவர்கள் இருவரும் வெவ்வேறு விதங்களில் தமது சமயத்திற்கும் மொழிக்கும் தொண்டாற்றியுள்ளனர்.

பெருந்தகை இந்துபோட் இராசரத்தினமவர்கள்.

நாவலர் அவர்களும், யாழ். இந்துக்கல்லூரி ஸ்தாபகர்களும் ஆரம்பித்த பெரும் பணி சேர். பொன்னம்பலம் இராமநாதன் உயர் திரு. சு இராசரத்தினமவர்களாலுமே பேணிப் பரிபாலிக்கப்பட்டுவந்தது.

### இந்துபோட் தோன்றியது



திரு. இராசரத்தினமவர்கள்

# இந்துபோட் இராசரத்தினம் தனிநாயகம் அடிகளுக்கு முத்திரை வெளியிட்டு அரசு கௌரவிக்க வேண்டும்

இந்துபோட் இராசரத்தினமவர்கள் இந்த நாட்டிலே 250க்கும் அதிகமான சைவப் பாடசாலைகளை உருவாக்கி 2000க்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் தோற்றுவித்துச் சைவப்பிள்ளைகள் சைவச் சூழ்நிலையில் கல்விகற்க அயராது உழைத்த உத்தமராவர். ஆறுமுகநாவலரது . அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர் தொடக்கி வைத்த பெரும் பணியை நிறைவேற்றிவைக்கக்கங்கணம் கட்டி நின்ற உடுப்பிட்டிக்கும் வல்வெட்டித்துறைக்குமிடைப்பட்டு வல்வெட்டியென்று அழைக்கப் பெறும் இக் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டாலும், பெரும்பாலும் யாழ் நகரில் நல்லூர் வைமன்வீதியையே தமது சொந்த இடமாக்கிக்கொண்டவராவர். திரு. இராசரத்தினமவர்கள் பண அத்திவாரமில்லாது தொடங்கிய சைவவித்தியாவிருத்திச் சங்கமே ஆங்கிலத்தில் 'இந்துபோட் ஒவ் எடியூகேஷனாக' நிலைத்துவிட்டது. இதனால் இவரை ''இந்துபோட் இராசரத்தினம்'' என்று அனைவரும் அழைக்கத்தொடங்கினர்.

இவர் அப்புக்காத்துத் தொழில் புரிந்துவரும் காலத்தில் நம்நாட்டில் பாடசாலைகள் மூலம் மதமாற்றம் வெகு துரிதமாக நடைபெற்றுபெற்றுவந்தது. இதற்கோர் முற்றுப்புள்ளிவைக்கவே பல சைவப்பெரியார்களின் உதவியுடன் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தைஏற்படுத்தினார் அது மட்டுமல்ல அச்சங்கத்தை அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரித்து ஏனைய கிறிஸ்தவப்பாடசாலைகளைப்போன்று அரச உதவிபெறும் கல்விக்கூடங்களாகச் செய்வதற்கு ஏற்ற வழிவகைகளையும் கையாண்டு வெற்றிக்கொடி நிலைநாட்டினார். அத்துடன் அமையாது பல தமிழ் ஆசிரியர்களை உருவாக்கத் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலையையும் தோற்றுவித்து சைவவித்தியாவிருத்திச் சங்கத்தை மாபெரும் இந்து ஸ்தாபனமாக வளர்த்தெடுத்தவர் இராசரத்தினமவர்களே.

நமது நாட்டின் கல்விக்கு வேற்று நாடுகளிலிருந்து வேறு நோக்கங்களுடன் வந்த மிஷனரிமாரே கதியென நம்பியிருந்த நம்நாட்டு மக்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தத் தோன்றிய ஓர் விடிவெள்ளியாக விளங்கினார் இராசரத்தினமவர்கள். எங்கெங்கும் பிறமிஷனரிமாரின் பாடசாலைகளுக்கெதிராக அல்லது அவைகளுக்குச் சமீபத்தில் சைவப்பாடசாலைகளை உருவாக்கினார் வெளிநாட்டுப் பண உதவிபெற்று நன்கு நடைபெற்றுவந்த மாற்றுமத கல்விக்கூடங்களுக்கு நிகராக இவர் வித்தியாசாலைகளை நடத்த முடியாதிருந்தபோதும் இவரதுவிடா முயற்சி தளிர்விட்டுத் தழைத்தது. பணப்பலமில்லாது யாழ். நாட்டு இந்துப் பெருமக்களது உதவிகளோடு ஆரம்பித்த கல்விக் கழகங்கள் தான் நாம் இன்றும் சைவசமயிகளாக வாழ வழிவகுத்தது. இப்பாடசாலைகளே தேசியப்பற்று உருவாக ஏதுவாக இருந்தனவென்றால் மிகையாகாது.

சைவஅனாதைச் சிறுவர்களுக்கு ஒருநிறுவனம்வேண்டுமென்று ஆவனசெய்தார். ஆனால் அந்நிறுவனம் இராசரத்தினமவர்களின் மறைவிற்குப்பிறகு தொடர்ந்து நடைபெறத் திண்டாட்டப்படுவதை நாமறிவோம். அறக்கொடை மிகுந்த வள்ளல்கள் இலங்கையில் இன்னும் இல்லாமல் போகவில்லை. கொடுப்பதற்கு பலர் முன்வரவேண்டும்.

உயர்திரு இராசரத்தினமவர்கள் அக்காலத்துச் சட்ட நிருபணசபை அங்கத்தவராக இருந்தபோது அக்கால பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கத்துடன் வாதாடிச் சைவமக்களுக்குப் பிரதானமான ஆடி அமாவாசைத்தினத்தை அரசாங்க விடுமுறையாக்கிய பெருமையும் இவருக்குண்டெனப் பல பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். தனக்கும் தன் குடும்பத்துக்குமென ஒரு சொத்தும் தேடி வைக்காது


அராலியூர்
## வெ. சு. நடராசா


(9ம் பக்கம் பார்க்க

# வி. ஓ. ஜே.

கவர்ச்சி என்பது என்ன? அது மாதர்க்குச் சிறப்பான ஒருவித மலர்ச்சி மட்டும் தானா!

விஞ்ஞான அடிப்படையில் அமைந்த உணர்வு ''ஒவ்வாத முனைகள் ஒன்றை ஒன்று கவரும்'' என்றகாந்தவியல் கற்பிக்கும் உண்மைக்குக்கட்டுப்பட்டது.

மறைந்த பேராசிரியர் சுந்தரலிங்கத்தின் புகழைப் பாடிய பிரதமர் 'பிரேமா' சபையில் நிகழ்த்திய உரை இதனை விளக்குகிறது.

தேசபிதா என்று சொல்லப்படும். படிக்காத மேதை டீ எஸ் பேராசிரியரில் கவர்ச்சிகொண்டிருந்ததும் இதற்கு நல்ல உதாரணம்

அடிதலைமாறிய இன்னொரு உதாரணம்; படித்த மாமேதை நேரு படிக்காதமேதை காமராஜரில் கொண்டிருந்த பெருமதிப்பு. இந்தியாவின் பிரதமராக காமராஜ் வந்திருந்தால் நேரு சாந்தியடைந்திருப்பார் என்று நம்பிக்கையாக் கூறலாம்.

''கிட்டாதாயின் வெட்டெனமற'' என்ற மூதாட்டியின் ஆப்தவாக்கியத்துக்கு இலக்கியமானவர் மறைந்த பேராசிரியர்; இதுதான் இன்று 'ராஜிநாமா' வென்ற போர்க்கொடியாகப் பரிணமித்திருக்கிறது.

இலங்கை வரலாற்றில் தம்முடைய பதவியைத் துச்சமெனமதித்து தூக்கியெறிந்த தேசபக்தன் சுந்தரலிங்கத்தைப் போன்று நேர்மையான தலைவன் வேறு யாருமுண்டோ? என்று மெச்சினார் சரத்.

பாராளுமன்றத்தில் பிரதமர் நிகழ்த்திய நினைவுரையைக் கேட்டவர்கள் வாசித்தவர்கள் 'நீங்கள் இன்னும் ராஜிநாமாச் செய்யவில்லையா?' என்ற மயானக்குரல் வவனியாவிலிருந்து வருகிறதாக நினைப்பார்கள்.

உண்மையில் பஞ்சபாண்டவரை இலங்கைக்குதவிய யாழ்ப்பாணக் குரல் அது; அடங்கா த.வி ஓ.ஜே வெற்றியில் அடங்கும்.

# துளிகள்

வரதர்

## இரண்டு பேச்சாளர்கள்

யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் சேர்ந்து நடத்திய ஒரு இலக்கியக்கூட்டம் சென்ற 6-3-85 புதன்கிழமை ஈழநாடு அலுவலகத்தைச் சேர்ந்த மண்டபத்தில் நடைபெற்றது. கூட்ட அறிவித்தலில் காலை 10மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும் என்று குறித்திருந்தார்கள்.

என்னைப்பொறுத்த மட்டில் குறித்த நேரத்துக்கு நான் மிகவும் கட்டுப்பட்டவன். சில நிமிடங்களே பிந்தினாலும் சில சமயங்களில் முந்தினாலும் எனக்குப்பொறுக்காது ஆனால் இப்படிச்சில இலக்கியக் கூட்டங்களுக்கு முன்பு குறித்தநேரத்துக்குப்போய் ஒவ்வொருமுறையும் குறைந்தது அரைமணிநேரமாவது காத்திருந்த அனுபவம் எனக்கு நிறையவுண்டு. எனவேதான் அன்று சரியாக 10-30மணிக்கு கூட்டம் நடந்த இடத்துக்குப்போய்ச் சேர்ந்தேன்.

என்ன அநியாயம் பாருங்கள். எங்கள் யாழ்ப்பாணத்து மரபை உடைத்தெறிந்துவிட்டு நான் போனபோது கூட்டம் ஓகோ என்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. தலைவர் உரை வரவேற்புரை ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும்முடிந்து பரிசளிப்புரையை மல்லிகை ஜீவா ஆற்றிக்கொண்டிருந்தார்.

பரிசளிப்புரையை ஜீவா ஆற்றிக்கொண்டிருந்தார் என்று எழுதினேன், தவறு. நண்பர் ஜீவா ஒருபோதுமே உரையை ஆற்றுவதில்லை அவர் கொதிப்பதுதான் வழக்கம்!

ஜீவாமீது எனக்கு ஒரு தனிப்பாசம் உண்டு. அதற்கு காரணம் இவ்வளவு முயற்சியுள்ள ஒரு விண்ணன் வேறு ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பித்து இந்த முயற்சியை அதில் செலவிட்டிருந்தால் இற்றைக்கு ஒரு லட்சாதிபதியாக கோடீஸ்வரனாகஇருந்திருப்பாரே என்ற அனுதாபமா அல்லது யாழ்ப்பாணத்து வரண்ட மண்ணிலே ஒரு 'மல்லிகை'ச் செடியை நட்டு அதை வாடவிடாமல் வளரவைத்து மணம் பரப்புகிறாரே' என்ற வியப்பா என்பது இன்னும் தெளியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அவர் எவ்வளவுதான் பெரிய 'கொம்பனாக' இருந்தாலும், அவருக்குள்ளே இருக்கிற ஒரு நல்ல இனிய பண்புள்ள மனிதன் மட்டும் இல்லாமலிருந்தால் அவரை ஒரு பொருட்டாக நான் கணித்திருக்கமாட்டேன்.

ஜீவாவின் எழுத்துக்களை மட்டும் படிப்பவர்கள் 'அவருக்குக்கொஞ்சம் தலைக்கனம்' என்றுநினைப்பார்கள். மேடைப் பேச்சைமட்டும் கேட்டவர்களோ 'சரியான முரட்டு ஆசாமி' என்று நினைப்பார்கள். ஒரு சபையில் பேசுவதற்கென்று ஜீவா எழும்பிவிட்டால் அங்கே ஒரு மனிதனைக் காணமுடியாது. சிங்கம் கர்சிக்கும் புலி உறுமும். கருத்தடனோ கருத்தில்லாமலோ அடுக்கு மொழிகள்வரும். ஏதாவது 'மேடைப்பேச்சு' என்ற நூலைப்படித்துப் பழகியிருப்பாரோ தெரியாது. உறைப்பான சொல்லடுக்குகளைத் தேவைக்கேற்றமாதிரி உயர்த்தியும் பதித்தும் நிறுத்தியும் முழங்குவதில் ஜீவாவிடம் பேச்சுக்கலை கைகட்டி நிற்கும்.

மேடையிலே உறுமுகிற இந்த ஜீவா தனிப்பட்ட முறையில் நட்பாடும்போது மிகவும் இனியவர். நல்ல பண்பாளர். வள்ளுவன் சொன்ன ஒப்புரவறிதல் கண்ணோட்டம் என்பவைகளைக்கூட ஜீவாவிடம் காணலாம்.

ஜீவாவிடம் குடிகொண்டிருக்கிற இந்த மனுஷத்தனம் எனக்கு மிகவும் பிடித்த பொருள். அதனால் அவர் மீது பாசம் மட்டுமல்ல ஒரு மரியாதையும் எனக்குண்டு.

நான் கூட்டத்துக்குப்போய்ச் சேர்ந்தபோது ஜீவா பேசிக்கொண்டிருந்தார்- அவருடைய பேச்சை நான் கேட்டதைவிட அதிகம் பார்த்துக்கொண்டு தானிருந்தேன்.

ஜீவா பேசிய பிறகு, வேறு சில நிகழ்ச்சிகளுக்குப் பிறகு. ஜீவாவின் சரியான எதிரி ஒருவர் அங்கே பேசினார்.

இங்கே நான் 'எதிரி என்று குறிப்பிடுவது வழக்கமான 'பகையாளி' என்ற கருத்தில் அல்ல. 'கிழக்குக்கு எதிரி (எதிர்) மேற்கு' என்ற மாதிரியான கருத்தில்.

இந்த எதிரியின் பெயர் மேடைகளிலோ, பத்திரிகைகளிலோ பிரபலமாக அடிபடுவதில்லை கனக செந்திநாதன் மாதிரி மெலிந்த உருவம். ஆனால் செந்திநாதனின் பெயர் பத்திரிகைகளில் அடிக்கடிவந்து கொண்டேயிருக்கும். ஏதாவது கூட்டத்துக்கு ஆள்வந்துவிட்டால் வெங்கலக்கடையில் ஆனை புகுந்த மாதிரியிருக்கும். ஆனால் இந்த மனிதர் அந்த ரகமுமல்ல—

ஈழநாடு ஆசிரியப் பதவியிலிருந்த ஐயாறன் ஐயா மறைந்த பிறகு வேறு யாரோ ஆசிரியத் தலையங்கம் எழுதிக்கொண்டிருந்தார்கள். யாராவது எழுதட்டும், எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை யாது. ஏனென்றால் முன்பெல்லாம் செய்திப்பத்திரிகைகளில் நான் சில சமயம் 'ராசிபலன்' கூடப்படிப்பேன். ஆனால் ஆசிரியத் தலையங்கம் படிப்பதில்லை.

(9-ம் பக்கம் பார்க்க)

## இருவர் எழுதும் சிறுகதை

**அதோ** அந்தச் சந்தியில் கம்பீரமாக உயர்ந்திருக்கின்ற அந்த மாடி வீட்டின் முற்றத்தில் நிக்கிறாரே, அவர்தான் விநாயகர் கோவில் தர்மகர்த்தா சதாசிவத்தார். மூன்று பெரிய வீடுகள், கொட்டகை நிறைய மாடுகள், நிலபுலன்கள். கார், மாந்தோப்பு, வாழை தோட்டம்' இத்தியாதி சகல வசதிகளும் கொண்ட பெரிய புள்ளி.

வழக்கத்தைவிட சதாசிவத்தார் இன்று வலு உற்சாகமாகக் காணப்பட்டார். ஓ, இன்றைக்கு அவரது மகன் பிரசாத் லண்டனிலிருந்து வருகிறானல்லவா! பிரசாத் சதாசிவத்தாருக்கு ஒரே செல்ல மகன். எவ்வளவு கோபமிருந்தாலும் மகன் பிரசாத்தைப் பார்த்தால் அப்பாவின் கோபம் தணிந்துவிடும். கூப்பிடும்போது மகன் பிரசாத்தான் வந்து நிற்கவேண்டும். கூப்பிடாதபோதும் அவர் கண்ணில் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். சற்றுநேரம்பார்க்கவில்லை என்றால் கூப்பிடுவார். இவ்விதமாக' சிறு வயதில் வளர்ந்தமகன் பலவருடங்களின் பின் லண்டனில்உயர்கல்வியை முடித்துப் பட்டதாரியாக ஊர் திரும்புகின்றான்.

'மிட்சுபிஸி லான்ஸர்' கார் யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல் தூரத்திற்குப் பாம்புபோல் வளைந்து நீண்டிருந்த பண்ணைவீதியை முப்பதே நிமிடத்தில் கடந்துவிட்டுவாசலில் வந்து நின்றது.

அதிக வெண்மையோ, அதிக கறுப்போ இல்லாத பொது நிறம், சுருண்ட மயிருடன் பக்க வகிடு. கழுத்தில் தங்கச் சங்கிலி, புன்னகை பூத்த முகம் அழகாக நறுக்கிவிடப்பட்ட மீசை, கறுப்பு நிறத்தில் உயர்ந்தரக துணியிலான நீண்ட காற்சட்டை. பட்டர் கலரிலான வெளிநாட்டு நாகரிக பாணியிலமைந்த ஷேர்ட் இதுதான் காரிலிருந்து இறங்கிய சதாசிவத்தாரின் மகன் பிரசாத்தின் தோற்றம்.

குத்துவிளக்கு முத்துப்போல் எரிந்து ஒளி வீசியது. ஊதுவத்தியின் மணமும் சாம்பிராணியின் மணமும் கலந்து ஒரு சுகந்தமணம் சதாசிவத்தாரின் வீடுமுழுவதும் பரவியிருந்தது. பிரசாத் காரைவிட்டு இறங்கி 'போர்ட்டிக்கோ'வினூடாக வாசலையடைந்தான். சதாசிவத்தாரின் தூரத்து உறவுப்பெண்கள் இருவர் ஆரத்தி எடுத்து நெற்றியில் திலகமிட்டனர். சதாசிவத்தாரோ தனது மகன் இமய மலையை புரட்டிஎடுத்துச் சாதனைபுரிந்துவிட்டதாக மகிழ்ச்சியில்திளைத்துப்போனார் அவரது குடும்பத்தின் ஒரே ஆண்வாரிசு, லண்டன் சென்ற பட்டதாரியாகிவிட்ட பெருமை அவரது உள்ளத்தில் அலைஅலையாகப் பொங்கி வழிந்தது.

மதிய உணவை முடித்துக்கொண்டு பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்து வெளிநாட்டுக் கதைகள் பேசிக்கொண்டிருந்தனர் தந்தையும் மகனும் ''வணக்கமையா!' வேலைக்காரன் மார்க்கண்டும், அவனது மகள் பூரணியும் எதிரே நின்று கொண்டிருந்தனர்'' சின்னையா பெரிய படிப்பெல்லாம் படிச்சிட்டு வந்திருக்கிறார்... அதுக்காக நம்ம ஊர் முருகமூர்த்தி கோவில பொங்கலிட வேண்டுமென்று சொல்லியிருந்தீர்களே இந்தாங்க பிரசாதம்...'' வேலைக்காரன் கைமடித்து நீட்டிய தட்டை, கை நீட்டிப் பெற்றுக் கொண்டார் சதாசிவத்தார்.

சதாசிவத்தாரிடமும் மகனிடமுமே பிரசாதத்தைக் கொடுத்தாள் பூரணி. அவன் உள்ளங்காலிலிருந்து உச்சி வரை பார்வையை வீசினான். யானைத்தந்தத்தால் கடைந்தெடுக்கப்பட்டது போன்ற அழகிய உடலில்; சந்திர பிம்பத்தை யொத்த வட்டமான முகம்; ஒளி வீசும் வதனத்தில் 'துருதுரு' வென மருட்சி கொண்ட செவ்வரி படர்ந்த கண்கள்; துடிதுடிக்கும் சிவந்த அதரங்கள்; முல்லை மலர்கள் முறுவலிப்பது போன்ற வெண்மையான பல் வரிசைகள்; மாம்பழக் கன்னங்கள்; மெல்லிய பூங்கொடிபோல் துவளும் துடியிடை; காந்தள் மலர் போன்ற கரங்கள். இவ்வளவும் கனிந்து விளங்கும் பூரணியை அப்படியே எடுத்து விழுங்கி விடுபது போல் மறுபடியும் பார்த்தான். பிரமன் படைப்பில் இவளொரு புதுமையான ஏழைச் சித்திரம். திரும்பவும் ஒருவரையொருவர் விழுங்குவதுபோல பார்த்துக் கொண்டனர். ஒரே வார்த்தையில்கூறிவிடவேண்டுமாயின் பூரணி அவன் கண்களை மட்டுமல்ல கருத்தையும் முதற்பார்வையிலேயே கவர்ந்து விட்டாள் அவன் உள்ளமும், உயிரும் ஒருங்கே அவளிடத்தில் தஞ்சமடைந்துவிட்டன என்றே சொல்லவேண்டும். அந்தப் பார்வையே அவர்களுக்கிடையே காதலை மலரவைத்தது.

அந்த முதல் சந்திப்புக்குப் பின் பிரசாத் தன் மனங்கவர்ந்த பூரணியை பலமுறை தனிமையில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தன் உள்ளக்கிடக்கையை அவளிடம் வெளியிட்டான் அச்சந்திப்புகளின் போதெல்லாம் முதலில் அவள் அதை முற்றாக எதிர்த்தாள். இக்காதல் தனது அந்தஸ்துக்கு ஒருபோதும் ஒத்து வராது என்று நன்கு விளக்கினாள் ''பூரணி ஏன் என்னை அந்நியனுக்கிக் கதைக்கிறாய்? கோயிலிலே மலர் தெய்வத்தின் பாதத்தில்தான் இருக்கும். ஆனால், உன்னை நான முதன் முதலில் எப்போது கண்டேனோ அன்றே என் உள்ளத்தில் இருத்திவிட்டேன்.' என்று உறுதியளித்தான் இந்த உறுதியை ஏற்றுக்கொண்டாளோ என்னவோ ...

உண்மையில் பூரணி பிரசாத்தைமனமார விரும்பினாள்.

வாழைத் தோட்டத்தில், மாந்தோப்பில், முருகமூர்த்தி கோயிலடியில்... ஒவ்வொரு சந்திப்பும் அவர்களது அன்பை வெளிப்படுத்துவதாகவும், உறவை வலுப்படுத்துவதாகவுமே அமைந்தது இரவில் கீழ்வானில் வெண்ணிலவு தண்ணொளிவீசிப் பவனிவரும் வேளையில் பிரசாத்தும், பூரணியும் பனியின் சீதளத்தில் தங்களைக் குளிப்பாட்டி இளம் தென்றலாக வீசும் குளிர் கலந்த காற்றில் மிதந்து தங்களை மறந்த நிலையில் இன்ப மயக்கத்தில் ஆழ்ந்த நாட்களே அதிகம்.




பூரணியின் தந்தைக்கு இந்த நெருக்கமான உறவு தெரியவந்ததும் பதறிப் போனான். சதாசிவத்தார் கொலைக்கும் அஞ்சாதவர் என்பதும் தெரியும்.

'வானமும் பூமியும் ஒன்றையொன்று தொடமுடியுமா?' என்று சந்தேகப்பட்டான்.

எவ்வகையிலும் பொருந்தாத இந்தக் காதல் பேராபத்தில் போய்முடிந்துவிடப்போகிறதே என்று அஞ்சினான். சமூகம் எவ்வளவு தூரம் மாறிவிட்டது. உலகம் அறியாதவள் என்று எண்ணியிருந்த பூரணி, கட்டுப்பாடில்லாத பறவையாக, சுதந்திரத்தை விரும்பும் அவள் மனப்பாங்கு நறுந்தேனைச் சொரியும் மலரில் மயங்கும் தேனீயைச் சத்தம் போடாமல் பிடிக்கவரும் பையனைப்போல, அந்த இளமையைச் சுற்றி வந்த பிரசாத் ...தன் மகளைப்பற்றிய ஒரு சுய நம்பிக்கை மார்க்கண்டுக்கு இருந்தது உண்மைதான்.

மார்க்கண்டு பூரணியைக் கண்டித்தான். அக்கண்டிப்பில் திருப்திப்படாத மார்க்கண்டு, ''எடி பிள்ளை பூரணி, துடைப்பத்தை தேவை முடிந்தால் வெளியிலதான் வைப்பாங்கள், ஊராவது வூட்டுக்குள்ள வைப்பாங்களா? அதிலும் சின்னையா பெரியவர்; படிச்சவர்; உயர்ந்த அந்தஸ்தில உள்ளவர். இதெல்லாம் நான் சொல்லியா உனக்குவிளங்கவேணும்? நீ என்ன குழந்தையா?'' என்று புத்திமதிகள் பல கூறினான். எனினும் இவ்விவகாரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர சின்னையாவிடமே நேரடியாகக் கதைப்பது என்ற முடிவுக்கும் வந்தான்.

'சின்னையா உங்களோட ஒண்டு கதைக்க வேணும்'' கூனிக்குறுகி, சால்வையை எடுத்து கமக்கட்டில் வைத்தவாறே தனக்கே உரித்தான வழமையான பாணியில் நின்றான் மார்க்கண்டு, ''சொல்லு மார்க்கண்டு.. ஏன் தயங்குகிறாய்...'' மார்க்கண்டை உன்னிப்பாகப் பார்த்தவாறே பிரசாத் கூறினான். ''ஐயா நாங்கள் ஏழையள். எங்களிட்ட இருக்கிறதெல்லாம் எங்கட தன்மானம் ஒன்றுதான், அதையும்இழந்துபோட்டு நாங்க...'' மார்க்கண்டு நிறுத்தினான்.

''இஞ்ச பார் மாக்கண்டு, சுத்தி வளைக்காம நேரடியா விஷயத்துக்குவா'' மார்க்கண்டுகதைப்பது விளங்கியும் அவன் வாயிலிருந்து விஷயத்தை வெளிச்சமாக்க பிரசாத முயன்றான். ''பூரணி என்ர ஒரேமகள்... சின்ன வயசிலேயே தாயை இழந்தவள் '' சதாசிவத்தாருக்கு உழைத்து முறுக்கேறிய அந்த உடம்பு கூட, காமாட்சியுடன், பூரணியின் தாயுடன் வாழ்ந்த அந்த வாழ்க்கையை நினைத்து ஒருகணம் குலுங்கி அழுதது கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

ஆசிரியருக்கு மாணவன் பாடம் ஒப்புவிப்பதுபோல தொடர்ந்தான். ''காமாட்சி சாகேக்கை மகள் பூரணிக்கு மூண்டுவயசு. அவளுக்குபூரணியில அளவு கடந்த பிரியம். செங்கமாரி எண்டுபடுத்தவள், படுத்தவள்தான் திரும்பஎழும்பேலை'' மார்க்கண்டு நிதானித்துக் கொண்டான் அவன் கண்ணை மூடியதோடு, இந்தக் குழந்தையைக் காப்பாற்ற மறுமணம் செய்யச்சொல்லிப் பலபேர் வற்புறுத்திச்சினம். நான் கேக்கேல்ல. வாறவள் என்ரை பிள்ளையை எப்பிடி வச்சிருப்பாளோ எண்ட பயம் ...இந்த உடம்பு அவளுக்காகவே வாழுது. அவளுக்கு ஒண்டெண்டால் என்னால தாங்கேலாது''. பொங்கிவரும் கண்ணீரை கமக்கட்டுச் சால்வையால்துடைத்துக்கொண்டான். ''ஐயா! விரலுக்குத் தக்கினது தானே வீக்கமெண்டு எனக்குத் தெரியும் ஆனா. அதுகுழந்தைக்குத் தெரியுமோ...'' மார்க்கண்டு நிறுத்தினான்.

நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே எழுந்த பிரசாத், ''இஞ்சபார் மார்க்கண்டு நீ சொல்லுற விஷயம் எனக்கு விளங்குது. நீ இவ்வளவுகதைக்கிறபடியால் நானும் வெளிப்படையாகவே கதைக்கிறன். பூரணியை நான் மனப்பூர்வமாக விரும்புறன். அவளையே கல்யாணம் முடிக்கவும்ஆசைப்படுகிறன். தந்தையெண்ட ஸ்தானத்தில இருந்துநீஇதுக்கு என்ன சொல்லுகிறாய்.''

''ஐயா ஒவ்வொரு தந்தையும் தன்னுடைய பிள்ளை நல்ல இடத்தில வாழவேண்டுமெண்டுதான் விரும்புவினம். அதைப் போல உங்கட அப்பா, பெரியய்யாவும் விரும்புவாரையா'' மார்க்கண்டுவின் பேச்சில் அனுபவமுத்திரை பளிச்சிட்டது. ''என்ரை வாழ்க்கை நல்லா இருக்கவேணுமெண்டு அப்பா விரும்பின இதுக்குக்கட்டாயம் சம்மதிப்பார்.''

**கரம்பொனூர் ரமேஷ் வேதநாயகம்**

அடுத்தவாரம்:

காவற்றுறையூர் சபா, உதயகுமார் தொடர்கிறார்.

## பட்டம்

படித்துப் படித்துச் சித்தி யெய்திப்
பட்டம் பலதைக் கொள்ளலாம்
படித்துப் படித்துப் பதவி யேற்றுப்
பணிகள் பலதைப் பரவலாம்
படித்துப் படித்துப் புத்தி வந்ததும்
பயனி லாமை செய்வதால்
படித்த மடைய னென்னும் பட்டம்
பரவ லாகி வருதல்பார்

படித்த பலத்தை விடுத்துக் குடிக்குப்
பலிய தாகிப் போவதும்
படித்த பலத்தை அடுத்துக் கெடுத்துப்
பதவிப் பந்தம் பிடிப்பதும்
படித்த பலத்தை எடுத்துக் காட்டிப்
பாம ரரைப் பழிப்பதும்
படித்த மடையர் செய்கைத் தென்றே
படித்துப் படித்துச் சொல்லுவோம்.

கவிஞர் வே. ஐயாத்துரை




இவ்வாறாக ஒலிவரையும் இழுத்துக்கொண்டு மிஸ்டர் கிரக்கிட்டின் இருப்பிடத்துக்குள் நுழைந்தான் பில்சைக்ஸ்.

சாய்மனைக் கதிரையில் அமர்ந்து பெரிய பைப் ஒன்றை இழுத்துப் புகைத்துக் கொண்டிருந்தான் கிரக்கிட், ''பில் சைக்ஸ்' நீர் விஷயத்தை அப்படியே கைவிட்டுவிட்டீரோ என்று நான் பயந்துகொண்டிருந்தேன் அப்படியானால் நானே தனிமையில் விஷயத்தை நடத்திமுடிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்'' என்று கூறியபடி திரும்பியவன், ஒலிவரைப் பார்த்துவிட்டு ''ஹலோ! என்று உரத்துக் குரல் எழுப்பினான். பிறகு, 'இது யார்'? என்று வினவினான். ''ஒரு பையன் அவ்வளவுதான்'' என்றான் பில்சைக்ஸ் பிறகு ஏதோ அவன் காதில் ஓதினான். அதன் பிறகு ஒலிவரை கிரக்கிட் மிக ஆச்சரியத்துடன் பார்த்தான்.

பிறகு ஒலிவரை ஓய்வுஎடுத்துக்கொள்ளும்படி கூறிய சைக்ஸ்அன்றிரவு தங்களுடன் வெளியில் போகவேண்டியிருக்கும் என்பதையும் கூறிவைத்தான். கணப்பின் அருகில் ஒரு கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான் ஒலிவர். சைக்சும், கிரக்கிட்டும் ஏதேதோ கதைத்துக் கொண்டும் மது அருந்திக் கொண்டுமிருந்தார்கள். ஒரு கிளாஸில் மதுவை ஊற்றி ஒலிவரிடம் கொடுத்து அதைக் குடிக்கச் சொன்னான் கிரக்கிட் பையன் தயங்கவே சைக்ஸ் அவனை வெருட்டி குடிக்கும்படி கட்டாயப்படுத்தினான். பயத்தின் காரணமாக ஒலிவர் தன்னிடம் நீட்டப்பட்ட மதுவை வாயில் ஊற்றி மடக்கென விழுங்கிவிட்டு புரக்கேறிய தால் தொடர்ச்சியாக இருமலானான். இது அந்த இரு நண்பர்களுக்கும் மகிழ்ச்சியாக விருந்தது. பிறகு மூவரும் படுத்து சிறிது நேரம் உறங்கினார்கள்.

இரவு ஒன்றரைமணியளவில் டோபி கிரக்கிட் எழுந்து மற்றவர்களை எழுப்பிவிட்டான். கிரக்கிட்டும், சைக்சும் தங்களின் மேல் கோட்டுகளை அணிந்துகொண்டு பலவிதமான ஆயுதங்களை எடுத்து பாக்கெட்டுகளில் வைத்துக்கொண்டார்கள் பின்னர் ஒலிவரை கையில் பிடித்துக்கொண்டு புறப்பட்டார்கள். கோவில் மணி இரண்டு அடித்தபோது மூவரும் அந்தச் சிறு நகரைக் கடந்து விட்டார்கள். அங்கிருந்து மேலும் ஒருகால் மைல் தூரம் நடந்தபின் சுவரினால் சூழப்பெற்ற ஒரு வீட்டையடைந்தனர். அந்தச் சுவரின் மேலே உச்சிக்கு டோபி கிரக்கிட் ஏறிக்கொண்டான். ''அடுத்து பையனைத் தூக்கிக் கொடு நான் பிடித்துக்கொள்கிறேன்'' என்று சைக்சிடம் கூறினான் ஒலிவர் சுற்றுமுற்றும் பார்ப்பதற்கு முன்பதாகவே அவனுடைய இருக்கைகளுக்கிடையில் தன்னையைக் கொடுத்துத் தூக்கி மேலே கொடுத்தான் சைக்ஸ். அடுத்த சிலநிமிடங்களில் டோபிகிரக்கிட்டும் ஒலிவரும் சுவரின் அந்தப் பக்கம் புற்தரையில் கிடந்தார்கள். அதற்குள் சைக்சும் அவர்களுடன் சேர்ந்துகொண்டான், மூவரும் மெதுவாக அந்த வீட்டை நோக்கி நகர்ந்தார்கள். இவ்வளவு நேரத்துக்கும் பிறகு இப்போது தான் ஒலிவருக்கும் சரியாக விஷயம் புரிய ஆரம்பித்தது. வீடுடைத்துத் திருடுவதற்கு முயற்சி நடக்கிறது என்று புரிந்து கொண்டதும் அவன் கண்களில் நீர்மல்கியது முகம் குளிர்ந்தது. கைகால்கள் ஓய்ந்து முழங்காலில் விழுந்துவிட்டான்.

''எழுந்திரு என்று சத்தினான் சைக்ஸ். பாக்கட்டிலிருந்து கைத்துப்பாக்கியை இழுத்தவாறே ''இல்லையென்றால் உன்மூளையை இந்த புல்தரையில் சிதறடித்து விடுவேன்'' என்றான் ஆத்திரம் மேலிட.

''கடவுள்பேரால் கேட்கிறேன் என்னைவிட்டுவிடுங்கள் இந்த புற்றரையில்ஓடிவிழுந்து செத்துப்போகிறேன் லண்டன் பக்கமே திரும்பிப்பார்க்கமாட்டேன். கருணைகாட்டுங்கள் என்னைத் திரும்பபடி சொல்லாதீர்கள்", என்று கெஞ்சலானான் ஒலிவர்.

உள்ள சிறுமண்டபம் வழியாக தெருப்பக்கமாகவுள்ள கதவை அடைந்ததும். மெதுவாக அதைத் திறந்து எங்களை உள்ளே விடு'' என்று ஒலிவரிடம் கூறினான். பிறகு ஒலிவரைத் தூக்கி அந்த ஜன்னல் வழியாக உள்ளே விட்டான். பிறகு ''விளக்கைப் பிடித்துக் கொண்டு நேராக அந்தக் கதவை நோக்கிப் போ'' என்று கூறியபடி தனதுகையில் இருந்த கைத்துப்பாக்கியினால் அந்தக் கதவைச் சுட்டிக்காட்டினான். சற்றுத் தயங்கினாலும் சுடடுத்தள்ளப்படுவான் என்பது போல் அந்தச் செயல் இருந்தது.

''அது முடிந்தவுடன், உன்னை நான் போக விட்டுவிடுவேன்'' என்று மேலும் கூறினான் சைக்ஸ்.

வீட்டுக்குள் நின்ற ஒலிவரின் மூளைக்குள் ஒரு விஷயம் உதயமாயிற்று எப்படியோ மேல் மாடிக்குத் தப்பிச்சென்று வீட்டிலுள்ளவர்களை உஷார்படுத்திவிட வேண்டும். இந்த முயற்சியில் உயிர்போனாலும் பரவாயில்லை என்பதே அந்த யோசனை. அதற்குள் ஏதோ அரவம் கேட்டது. அதிர்ச்சிக்குண்டான சைக்ஸ் ''திரும்பி வா'' என்று ஒலிவரை நோக்கிக் கத்தினான். அதேசமயம் ஒரு கூச்சலும் கேட்டது இந்தத் திடீர் திருப்பத்தினால் கலவரத்துக்குள்ளான ஒலிவர் தன்கையிலிருந்த விளக்கை நழுவவிட்டு விட்டு என்ன செய்வதென்றறியாது திகைத்து நின்றான்.




இவ்வாறு யாரைப் பார்த்து ஒலிவர் மன்றாடினானோ அந்த மனிதன் தன்கையில் வைத்திருந்த கைத்துப்பாக்கியின் விசையை இழுத்து குறிவைத்துக் கொண்டிருந்தான். இதைப்பார்த்த டோபி துப்பாக்கியை அவன் கையிலிருந்து தட்டிவிட்டு ஒலிவரைப் பிடித்து அவன் வாயைத் தன் கையால் மூடியபடி வீடுவரை இழுத்துச் சென்றான்.

''இங்கே நீ ஒரு வார்த்தையும் பேசக்கூடாது. பேசினாயோ துப்பாக்கி தேவையில்லை. சத்தம் எதுவும் இல்லாமல் ஒரு தட்டிலேயே உன்னைப்போக்கிவிடுவேன்'' என்று உறுதி சொல்லி விட்டு, சைக்ஸைப் பார்த்து '.அந்த ஜன்னலைத் திறந்து விடு சைக்ஸ்'' என்று கூறினான் கிரகிட்.

ஒலிவரை இந்த வேலைக்கு அனுப்புவதற்காக பேஜினை மனதுக்குள் திட்டியபடி சைக்ஸ் ஜன்னலை மெதுவாக உடைத்துத் திறந்தான். அது ஒரு சிறிய ஜன்னல்தான் ஒலிவர் அளவு சிறு பையன் நுழையக்கூடியது

''இதைக் கேட்டுக்கோ என்று மெதுவாகக் கூறியபடி தன்பொக்கட்டிலிருந்து ஒரு விளக்கை வெளியில் எடுத்தான் சைக்ஸ் ''இதைப் பிடித்துக்கொண்டு மெதுவாக மேலே ஏறிப் போ மேலே

அந்தக் கூச்சல் மீண்டும் கேட்டது. ஒரு வெளிச்சம் தோன்றியது. பயத்துக்குள்ளான இருமனிதர்கள் அரை உடுப்புடன்தோன்றிமறைந்தார்கள்.பளிச்சென ஒருவெளிச்சம் ஒருகூச்சல், எங்கோ ஒரு கிறீச் சத்தம் சைக்ஸ் எட்டி ஒலிவரை அவன் சட்டைக் கழுத்தில் பிடித்து இழுத்து வெளியில்எடுத்தான். அவனைத் துரத்தி வந்தவர்களை நோக்கி துப்பாக்கியைத் தீர்த்தபடி பையனை இழுத்துச் சென்றான்

'பையனை அவர்கள் தாக்கி விட்டார்கள்இரத்தம் கொட்டுகிறது'' என்றான் சைக்ஸ், அதன்பின் மேலும் பலர் தங்களைத் துரத்திவருவது தெரிந்தது. துப்பாக்கி வெடிக்கும்சத்தம்கேட்டது. ஒரு குழிக்குள் பையனைக்கிடத்திவிட்டு 'அந்த ஓநாய்கள் உன் தொண்டையைக் குதறிக் கிழிக்கட்டும்'' என்று சபித்தான் சைக்ஸ் அதேவேளை கூச்சலும் அதிகரித்தது. ஓடிவந்து கொண்டி

(8-ம் பக்கம் பார்க்க)

# பேணுதல் என்னும் பண்பு

பேணுதல் என்பது இறைவனின் அருமையையும் பெருமையையும் உள்ளத்தால் உணருதல் உணர்ந்தபின் உள்ளம் ஒருமையுடன் திருவருளில் திளைத்தல். திளைத்தபின் தன்னிலை இழந்து வழிபடுதல் ஆகும்.

வழிபடுதல் என்பது இலகுவானது அல்ல. புறக்கண்ணால் இறைவனைக் காண்டல் செவியால் அவன் புகழ்கேட்டல் புறமனத்தால் நினைத்தல், கைகளால் திருமஞ்சனம் ஆட்டுதல் கமழ் சாந்து, கஸ்தூரி முதலாம் திரவியங்களை இறைவனின் திருமேனியில் அணிதல், பட்டுச் சாத்துதல்,விலையுயர்ந்த நவமணிகள் பொன்னாலான அணிகலங்கள் அணிதல், நறுமணத்தோடு கூடியதும் தேன் பிலிற்றுவதும் அன்றலர்ந்ததுமான மலர்களால் தொடுக்கப்பட்டதுமான, இண்டைகண்ணி, ஆரம், மாலை முதலானவற்றைச் சாத்துதல் மேலே பேசப்பட்டஅலங்காரத்தால் இறைவனை காண அவன் மீது வாஞ்சை ஏற்படலாம். அதனால் 'கண்ணூறு' ஏற்படாவண்ணம் காததுக்கொள்ள அன்புடை நெஞ்சம் ஆவன செய்யும்.

இனி—

தூபம், தீபம், சோடசோபசாரம், புகழ்பாடுதல், பேரிபேசுதல், மலர் இடுதல் தீபாராதனை அந்த வேளையில் கைகூப்பித் தொழுதல் ஆதிய வற்றோடு அமைவது அல்ல. நித்தலும் நித்தலும் நியமம் வழுவாது ஆலயத்தை நோக்கிக் காலார நடத்தல், இறைவனைக் கண்ணாரக் காணுதல் அவன் புகழைக் காதாரக் கேட்டல் அவன் திருவருளை மனதாரச் சிந்தித்தல்— அதன் பின்பு இறைவனின் திருவருள் நிறைவோடு வீட்டிற்குச் சென்று அவரவருக்கு அமைந்த கடமைகளை மேற்கொள்ளுதல்.

மேலே சிந்தித்ததை ஒரு நாள் இருநாள் அல்ல, ஒரு வாரம் ஒரு மாதம்— அல்லது ஓராண்டு அல்ல. தெய்வம் என்பதோர் சித்தம் என்று உள்ளத்தில் உதயமானதோ அன்றிலிருந்து அறிவு மலர்ந்த நாள் வரையாக இடை விடாது சிக்கனப் பிடித்து வழிபட்டு வரல் வேண்டும்.

அது ஆகிற காரியமா? மானிட வாழ்வு மாயையோடு இயைந்தது இன்பமும் துன்பமும் விருப்பும் வெறுப்பும் மறப்பும் நினைப்பும் என்ற இன்னோரன்ன இச்சைகளுக்குள் நின்று தடுமாறுவது அதனால் — சில சமயங்களில் நாம் நாடிச் செல்லாத செயல்கள் தாமாகவே நம்மை நாடி வந்து ஒட்டிக் கொள்ளும் உள்ளத்தினுள் புகுந்துவிடும். பின்னர்

சிவ. சண்முகவடிவேல்

அது போக 'இது' — அதுவாக நின்று ஆட்டிப் படைக்கும் அதனால் தான் பற்றை விடற்குப் பற்றுக பற்றற்றான் தாளினை என்பது ஆன்றோர் வாக்கு.

'உலோகாயதம் என்னும் ஒண்திறற் பாம்பின் கலா பேதத்த கடுவிடம் எய்தி அதிற்பெருமாயை எனப்பல சூழவும்' என்றதும் அதுவே.

அந்த மயக்கில் சிக்குண்பவர் இன்னார் — இனியார். செல்வர் —வறியவர், பாலர் — விருத்தர், கற்றோர் — கல்லாதார் என்று இல்லை அது. எந்த உருவத்தில் வரும்? எங்கிருந்து வரும்? என்ன செய்யும்? எப்படிச் செய்விக்கும்? என்பது கூட யாவராலும் அறிய ஒண்ணாதது

அது வந்து அறிவுக்குள் நுழைந்து 'புரளி' பண்ணாமல் பார்த்துக் கொள்ளுவதற்கு ஒரே வழி — நாம் எல்லாச் செயல்களிலும் திருவருளைத் தியானித்தலேயாகும்.

ஆலயத்தில் சென்று வழிபடுவது முதல் அன்றாடம் ஆற்றும் செயல் வரையில் உண்ணுதல், உறங்குதல், உரையாடுதல், தொழில் புரிதல் ஆய எல்லாவற்றிலும் — திருவருளை உணர்ந்து 'அதுவே' உண்ண வைக்கிறது, உறங்க வைக்கிறது, வாழ்த்தவைக்கிறது. வாழவைக்கிறது. வணங்க வழிகாட்டுகிறது என்ற உணர்வோடு நடமாடும் போது தான் நாம் இறைவனைப் பேணி வழிபட்டவர்கள் ஆவோம் அந்தப்பேணுதலே பண்பாகும். அந்தப்பண்பே பெருமையைக் கொடுக்கும். இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தைப் பயக்கும். அதனோடு பயனுள்ள சிவாலய வழிபாடும் ஆகும்.

கந்தபுராணப்பாடல் ஒன்றில் காஞ்சிப்பதியில் கேட்கப்படும் இசை எல்லாம் வேதம். நீர் எல்லாம் கங்கை கல் எல்லாம் இலிங்கம். அங்கு உள்ளவர்கள் எல்லோரும் தேவர்கள். கற்பக தருவே மரங்கள் எல்லாம் இன்பங்களை அனுபவித்தல் என்பது யாகம் செய்தல் உணவு என்பது சிவ பூசை. பேசுதல் என்பது செபம் செய்தல் நடத்தல் என்பது வலம் வருதல் நினைப்பது எல்லாம் தியானம் செய்தலாகும். விழுவது எல்லாம் பரம்பொருளின் பாதங்களைப் பணிதலாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இதோ அந்தப்பாடல் வருமாறு:

''அரியபல் லிசையும் மறைபுனல் கங்கை யருஞ்சிலை
யிலிங்கமங் குறைவோர்
சுரர்தரு வளைத்துங் கற்பக மின்பந் துய்ப்பது
வேள்வியூண் பூசை
உரைசெப நடத்தல் வலம்பெருந் தன்மை யுன்னலே
தியானம் வீழ்ந்திடுதல்
பரனடி வணக்க மாவது காஞ்சிப் பதிக்கலால்
எந்நகர்க் குளதே

# கதிர்காமம் கந்தன் கோயில் அன்றும் - இன்றும்

ஸி. சுந்தரலிங்கம்

[3]

### கதிர்காமமும் கீரிமலையும்

சோழராசன் புத்திரியாகிய மாருதப்புரவிகவல்லி 'தனக் குற்ற 'குதிரைமுகம்' என்னும் நோயினுல் வருந்திய காலத் தில் கீரிமலையிலுள்ள சிற்ருற் றில் ஸ்நானம் செய்யின் அந் நோய் நீங்குமென்று ஒரு முனி வர் சொல்ல அவ்வாறே தன் பரிவாரங்களோடு வந்து அத் தீர்த்தத்தில் நீராடி அந்நோய் நீங்கப்பெற்ருள். அவளும் அவள் பரிவாரங்களும் அவ்வி டத்தில் சிறிதுகாலம் வசித் தார்கள்.

இக்காலத்தில் கதிர்காமம் என வழங்கும் கார்த்திகேய கிராமத்தில் அரசுசெய்திருந்த உக்கிரசிங்கராஜனும் அச் சிற் ருற்றிலே ஸ்நானஞ் செய்ய அவ்விடம் வந்தான். அவன் அவளைக்கண்டு பெரும் காதல் கொண்டு பெரும் பிரயாசத் தோடு அவளை மணம் முடித் துக்கொண்டு சிறிது காலம் அவ்விடம் தங்கிப் பின் அவ ளோடு தன் இராஜதானிக்குச் சென்ருன்.

இச்சிறுகதை தெற்கு அந் தத்தில் உள்ள கதிர்காமம், பாகங்களிலிருந்து ஏன் வட மேற்கு எல்லையிலிருந்துங்கூட முருகபக்தர்கள் கதிர்காமத் துக்கு வந்திருந்தார்கள், கடற் பிரிவு ஏற்பட்டபின் கடல் கடந்து யாத்திரை செய்ய முடியாதவர்கள் திருச்செந் செந்தூரில் கந்தவழிபாடு செய் தனர். இதன் காரணமாக திருச்செந்தூர்பிரபலமடைந்து காட்டின் மத்தியில் உள்ள கதிர்காமம் கைவிடப்பட்டது.

### பூகோள ஆதாரம்

பூகோள ஆதாரத்துடன் கூடிய கதை வருமாறு: கதிர்கா மத்தில் மூன்று முக்கிய கோயி ல்கள் உள்ளன. கந்தன் எழுந் தருளியிருக்கும் கோயிலே அதி முக்கியமானதாகும். சிங் களத்தில் இதனை மகாதே வாலே (பெரியகோயில்) என்பர். நேர் எதிரே ஆயிரம் அடி தூர த்தில் உள்ளது வள்ளியம்மன் கோயில்; வடகிழக்கே சுமார் 150 அடி தூரத்தில் உள்ளது தெய்வயானை அம்மன்கோயில். இம் மூன்று கோயில்களிலும் நித்திய பூசைகள் இன்றும் நடைபெறுகின்றன. தெய்வ யானை, வள்ளி, கந்தன் ஆகிய மூவருக்கும் தனித்தனிக் கோயி ல்கள் ஒரே இடத்தில் அமைந் திருப்பதை அகில பாரதத்தில்

## கொடுங்கடல் கோளினுல் இலங்கை தனிப்பட்ட தீவாகும் வரை இந்திய முருக பக்தர்கள் கதிர்காமம் வந்தனர்!

வடக்கே கீரிமலைத் தீர்த்தத் துடன் கொண்டிருந்த தொடர்பை விளக்குகின்றது.

### தெய்வயானை— வள்ளி முருகன்

போர்வேலன் அசுரருடன் சமர் புரிந்து வென்ற இடம் எதுவென்பது பற்றி மாறு பட்ட கருத்துக்கள் எழுந்துள் ளன பண்டைக்காலந் தொட்டு முருகனுறையும் தலங்களாக பல பிரசித்தி பெற்ற தலங்களுள்ளன. அவற் றுள் சிறந்த திருப்பதிகள் ஆறு படைவீடுகள்:- திருப்பரங்குன் றம், ஆழிசூழ் திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர், திருவாவினன்குடி எனப்படும் பழனி (பழம் நீ) மலை; திரு ஏரகம் எனப்படும்சுவாமிமலை; திருத்தணி; பழமுதிர்ச்சோலை எனப்படும் அழகர்மலை.

மேற்கூறிய திருப்பதிகளில் ஒன்றிலாவது ஏழுமலைத் தொடர்கிடையாது. இருந் தும் திருப்பரங்குன்றமே கந்த னின் உறைவிடமென்று புல வர்களும், புரோகிதர்களும் கருதுகிருர்கள்.

மேற்குறிப்பிட்ட பகுதிக ளில் ஒன்றிலாவது கந்தன் வள்ளியை மணம் புரிந்ததாக சான்றுகளில்லை. கதிர்காமத் தில் மட்டுமேஏழுமலைத்தொட ருண்டு; கதிர்காமத்தில்தான் வள்ளியைக் கந்தன் காதல்மணம் புரிந்தான என்ப தற்குஅத்தாட்சிகளும் உண்டு

ஆதிகாலத்தில் இலங்கையும் தென்பாரதமும் ஒன்ருகவி ருந்தபொழுது அதாவது 'கொடுங்கடல் கோளினுல் இலங்கை தனிப்பட்ட தீவா கும்வரை, இந்தியாவின் பல ஓரிடத்திலாவது காண முடி யாது.

கதிர்காமத்தில் வள்ளி திரு மண உற்சவம் ருசிகரமாக இடம் பெறுவதுண்டு. இத்து டன் எதிர்காலத்தில் மூன்று வருடாந்த உற்சவங்கள் கொண்டாடப் படுகின்றன. ஜூலை மாதத்தில் 16 நாட்கள் கொண்டாடப் படும் மகோற்சவத்தை சிங்க ளத்தில் 'ஈசால பெரஹரா' என்பார்கள். நவம்பரில் வரும் 3ம் நாள் விழாவை 'இல்மஹா -காச்சி' என்பர். மூன்ருவதாக ஏப்ரலில் புதுவருடப்பிறப் பன்று நிகழும் விழாவை அலுத்அவுருத்த என்பர்.

கதிர்காமத்தில் தெய்வ பூசைகளை கப்புரளை'கள் என் றழைக்கப்படும் பூசகர்களே மேற்கொள்கின்றனர்.

இவர்கள் பூசை செய்யும் போது முகவடகம் பூண்டு- அதாவது வாயைத்துணியால் மூடிக்கட்டிக்கொண்டு பூசை செய்வர் இதற்கு 3 காரணங் கள் உள்ளன. 1. புனித யந்தி ரப் பேழையின்மீது (வழிபாட் டுச் சின்னம்) எச்சில் படாம லிருக்க, 2 ரகசிய வழிபாடு, 3. ஆதியில் பிராமணர்கள் சமஸ்கிருதத்தில் உச்சரித்த மந்திரங்களை வேடுவ பூசகர்க ளுக்கு போதிக்க முடியாமை யால் வாய் புதைத்து (மூடிக் கட்டி) மௌனவழிபாடு நிகழ் கிறது. [தொடரும்]

---

● வேதனை இல்லாதிருக் கும் நிலையே மகிழ்ச்சியா கும்.

சீனப் பழமொழி

---

## நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—10

# கிழிந்த உடையுடன் பாராளுமன்றத்தில் வன்னியசிங்கம்

'சிங்களம் மட்டும்' மசோ தாவை எதிர்த்து கொழும்பு காலி முகத்திடலில் பாராளு மன்றத்துக்கு முன்பாக இலங் கைத் தமிழரசுக்கட்சித்தலைவர் களும் தொண்டர்களும் நடத் திய சத்தியாக்கிரகம்தான் இலங்கைத் தமிழர்கள் தமது உரிமைக்காக நடத்திய முதல் போராட்டம் என்று சொல்ல லாம்

இதற்குமுன் அரசாங்கசபை யிலும் மற்றும் இடங்களிலும் பாராளுமன்றத்திலும் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாதாடினர் கள்; பொதுத்தேர்தல் பகிஷ் கரிப்பில் ஈடுபட்டார்கள்; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தலை வர்களுக்கு விண்ணப்பம் செய் தார்கள், பிரிட்டிஷ்குடியேற்ற நாட்டு அமைச்சர்களைச் சந் தித்தார்கள், இந்த முயற்சி களால் அவ்வப்போது தோன் றிய நிலைமைகளைச் சமாளிக்கக் கூடியதாகவுமிருந்தது.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்னரும் பிரிட்டிஷ், அமெரிக்க மேற்கு வல்லரசுகளின் கடாட்சத் துடன் இலங்கையில் ஆட்சி பீடத்திலிருந்த யு. என். பி. அரசாங்கங்கள் ஆட்சி செய்து வந்தன.

1956ஆம் ஆண்டுத் தேர்த லில் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா தலைமையி லான மக்கள் ஐக்கியமுன்னணி தனது தேர்தல விஞ்ஞாபனத் தில் இலங்கையில் தொடர்ந் தும் பிரிட்டிஷாரின் வச முள்ள கடற்படை விமானப் படைத்தளங்களை எடுத்து சுதந்திரத்தைப் பூரணப்படுத் துவது மற்றும் பல துறைகளை யும் தேசியமயமாக்குவது போன்ற பல முற்போக்குத் திட்டங்களையும் அறிவித்திருந் தது.

இதனுல் அமோக வெற்றி யீட்டிய மக்கள் ஐக்கிய முன் னணி பொதுமக்களின் ஆத ரவை மேலும் நிலைநாட்டுவ தற்கும் மக்கள் மத்தியில் சுலப மாகப் பிரபல்யம்பெறுவதற்கு மாக முதலில் 'சிங்களம் மட் டும்' மசோதாவைக் கொண்டு வந்தது

இதேசமயம் சிங்களம் மட் டும் மசோதாவை பாராளுமன் றத்தினுள்ளேயும் வெளியே யும் வன்மையாக எதிர்க்கப் போவதாகவும் தமிழ் மக்கள் உரிமைகளுடன் வாழ்வதற்கு தமிழரசு (இணைப்பாட்சி அமைப்பில்) நிறுவுவதற்கும் போராடப்போவதாக உறுதி யளித்துத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில்பெரும் பாலான தொகுதிகளில் அமோக வெற்றியீட்டிய இலங் கைத் தமிழரசுக்கட்சியும் ஒரு போராட்டத்தை ஆரம்பிப்ப தைத்தவிர வேறு வழியிருக்க வில்லை.

'அகிம்சையே எங்கள் ஆயு தம்' என்று கூறிவந்த தமிழ் அரசுக்கட்சியினர் முதல் தட வையாக கொழும்பில் பாரா ளுமன்றக் கட்டிடத்துக்குமுன் பாகச் சத்தியாக்கிரகம் செய் யத் திட்டமிட்டனர்.

இந்தியாவில் காந்திஅடிகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்து. அகிம்சைப்போர் நடத்தி வெற்றியீட்டியதை முன்மாதிரியாகக் கொண்டு இங்கும் ஆட்சியாளரை எதிர்த் துப் போராடலாமென்பது தமிழசுக்கட்சித் தலைமைப் பீடத்தின் நோக்கம்.

காந்தி மகாத்மா தலைமை யில் இந்தியாவில் நடந்த சத்தி யாக்கிரகங்களிலும் அகிம்சைப் போராட்டங்களிலும் ஆளும் வர்க்கத்தின் ஏவலாளர்களான பொலிஸ், இராணுவப்படை களே சத்தியாக்கிரகிகளைத் தாக்கியும்; துப்பாக்கியால் சுட்டும் கொடுமைப்படுத்தின; சத்தியாக்கிரகிகள்பலரும் அகிம் சைப் போராட்டத்திலீடுபட்ட வர்கள் பலரும் ஆயுதப்படை யினராலும் பொலிசாராலும் சிறைப்பிடிக்கபட்டு அன்றைய நீதிமன்றங்களினுல் சிறைத் தண்டனையும் விதிக்கப் பெற்ற னர். விடுதலைப் போராளிகள் பலர் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டுத் தண்டனை யனுபவித்த சம்பவங்களு முண்டு.

இதேபோல் தான் இங்கும் சத்தியாக்கிரகிகள் மீது பொலிசார் தாக்குதல் நடத்து வார்களென்றும் சத்தியாக் கிரகிகள் கைது செய்யப்படு வார்களென்றும் நீதிமன்றத் தில் நிறுத்தப்படுவார்களென் றும் இதன் மூலம் சிறைச் சாலைகளை நிரப்பலாமென்றும் அகில உலகுக்கும் இலங்கைத் தமிழரின் உரிமைக் கோரிக் கையை இதன் மூலம் எடுத் துக் காட்டலாமென்றும் தமிழ் அரசுக்கட்சியின் தலை மைப் பீடம் எதிர்பார்த்தது

இந்தநிலையை கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங் கம் 1956 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆருந் தேதி பிற்பகல் பாராளுமன்றத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைபற்றிக் கொண்டு வரப் பட்ட கவன ஈர்ப்புப்பிரேரணை மீது பேசுகையில் எடுத்துக் கூறினுர்.

எஸ். எம். ஜி.

சத்தியாக்கிரகத் திலீடுபட்ட தாங்கள் தாக்கப்பட்டது பற் றிப் புகார் எதுவும் தெரிவிக் கும் நோக்கம் இல்லையென்று தெரிவித்த திரு. வன்னிய சிங் கம். காலிமுகத்திடல் சத்தி யாக்கிரக சம்பவத்தின் போது உண்மையில்நடந்தவை என்ன வென்பதை சபை உறுப்பினர் கள் தெரிந்துகொள்ள வேண்டு மென்பதற்காகவும் தாம் கண்டவற்றையும் கேட்டவற் றையும் தமது அநுபவத்தை யும் அவர் எடுத்துக் கூறினுர்.

சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டவர்களில் கடும்தாக்கு தலுக்குள்ளானவர் திரு. வன் னியசிங்கம் தான். சத்தியாக் கிரகிகளைச் சூழ்ந்து கொண்ட காடையர் கூட்டம் முதலில் கற்களாலும் பொல்லுகளா லும் தாக்கிய போது பிட ரியிலும் நெஞ்சிலும் தாக்கப் பட்டவர் வன்னியசிங்கம்: சிங் கக்கொடியை உயர்த்தி வந்த ஒரு காடையன் கொடியைக் கழற்றிவிட்டு அத் தடியை இரண்டாக முறித்து வன்னிய சிங்கத்தின் தோள் மூட்டுக்க ளிலும் கன்னத்திலும் மார்பி லும் சரமாரியாகத் தாக்கி ஞன் மற்றுமொரு காடையன். அவரின் கன்னத்தில் கைமுஷ் டியினுல் ஓங்கிக்குத்திவிட்டு வன்னியசிங்கத்தின் கையிலி ருந்த கைக்கடிகாரத்தைப் பறித்தெடுத்தான். மற்ரெரு வன் அவரின்சட்டைப் பையில் தலை நீட்டிக் கொண்டிருந்த மூக்குக் கண்ணுடிக் கூட்டை மணிப்பர்ஸ் என்று நினைத்து உருவி எடுத்துக்கொண்டான். மற்றுமிருவர் அவரை நிலத் தில் வீழ்த்தித் தமது காடை யர் கூட்டத்துக்குள் இழுத் துச் செல்ல முயன்றனர். மற் ரெரு சத்தியாக்கிரகி இடை யில் புகுந்திராவிட்டால் வன் னியசிங்கம் காடையர் கூட் டத்துக்குள்ளே உழக்கி மிதிக் கப்பட்டிருப்பார்.

சட்டைவேட்டிகள் கிழிந்த நிலையில் திரு வன்னியசிங்கம் அன்றுபிற்பகல் பாராளுமன் றத்தினுள் பிரவேசித்தார்.

[மிகுதி அடுத்த வாரம்]

---

### ரூபா நோட்டுக்களே!

மதிப்பிற்குரிய
ரூபா நோட்டுக்களே!
நீங்கள்
பாரமற்றவர்கள் தான்
ஆனுல்......
உங்களைப் புரட்டுவதுதான்
எனக்கு மகா கஷ்டம்!

குமார்தனபால்

---

## கடவுள் கொடுத்த வரம்

போல்ரிஷார்க் என்று பெரிய ஞானி பாண்டிச்சேரி யிலே அன்னை இருந்தாரே, அவருடைய கணவர். பிரெஞ் சுக்காரர் அவர். அவர் மிக ரசமாகச் சொன்னுர் ஒரு உண் மையை. அதாவது புத்தர் பிறந்த நாட்டிலே இந்தியா விலே பௌத்தமில்லை. அதே மாதிரி ஏசுநாதர் பிறந்த நாட்டிலே கிறிஸ்தவம் இல்லை. இதைப் பார்த்தார் போல் ரிஷார்க் அவருக்கு இதிலிருந்து ஒரு ரசமான உண்மை புலப்பட்டது.

ஏன் அப்படியில்லை. அவராகவே ஒரு கதை கட்டினுர். அதாவது புத்தரும் ஏசுநாதரும் இறைவனிடத்திலே போய் ஒருவரம் கேட்டார்களாம் என்ன வரம்?

''ஏ கடவுளே நாங்கள் எத்தனையோ உண்மைகளை யெல்லாம் உபதேசம் செய்திருக்கிறோம். எங்களுக்குப் பின் னுல் வருபவர்கள் குதர்க்கம்தான் பண்ணப் போகிருர்கள். ஆனுல் நாங்கள் பிறந்த நாட்டிலாவது அந்தக் குதர்க்கம் இல்லாமல் இருக்க அருள் புரியவேண்டும் இறைவனே'' என்று கேட்டார்களாம் இரண்டுபேரும்.

''கொடுத்தேன்வரம்'' என்று சொன்னுராம் இறைவன்.

ஆகையினுலேதான் இந்தியாவிலே புத்தர் சொன்ன உபதேசங்களைக் குதர்க்கம் செய்ய ஆளில்லாமல் பௌத் தமே இல்லாமல் போய்விட்டது.

இஸ்ரேலில் ஏசுநாதர் சொன்ன போதனைக்கும் குதர்க் கம் பண்ணுவதற்கு ஆளில்லை.

# நாம் உய்வதற்கு வழி

இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் மந்திரி சபைக்கூட்டத்திற்குப் பிரதம மந்திரி வின்ஸ்ரன் சேர்ச்சிலை மந்திரிமார் காத்திருக்கிருர்கள் இவர் இன்று கூட்டத்திற்கு வருவாரா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. காரணம்: சேர்ச்சிலின் மகன் முதல் நாள் யுத்தத்தில் உயிர் இழந்தார். ஆனல் சரியான நேரத்திற்கு துக்கத்தைக் காட்டும் கறுப்புத் துண்டொன்றை கோட் கையில் கட்டிக்கொண்டு சேர்ச்சில் சமுகமளித்தார். வழக்கம் போலக் கூட்டம் நடைபெற்றது. முடிந்ததும் சேர்ச்சில் ''உலகில் எவ்வளவு துன்பம் வந்தாலும் நாட்டின் பலகருமங்களும் ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும்'' என்று கூறினர். இந்தப்புத்திமதி எமக்கு இப்பொழுதிருக்கும் இக்கட்டான நிலையில் மிகவும் பொருத்தமானது. மலைதான் அசைந்தாலும் மனம் அசையப்படாது எங்கள் நாளாந்த கருமங்களை ஒரு விதமாகச் செய்தே முடிக்க வேண்டும். தளர்ச்சிக்கு இடமில்லை. மாறிக்கொண்டு போகும் சூழ்நிலைக்கு உகந்த முறையில் எங்கள் கருமங்களின் நோக்கங்களைத் திசை திருப்ப வேண்டும். இதுவே நாமெமக்குச்செய்யும் கடமை. இதுவே வரும் சந்ததியினருக்கும் நாம் செய்யக்கூடிய கருமம் இதுவே நாம் உய்யும் வழி.

இந்தச் சூழ்நிலையில் விவசாயத்தை பற்றி ஆலோசித்தால் சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்றுதோன்றும் மிளகாய் வெங்காயம் முதலான உப உணவுப் பொருள்களை நாம் பிறவிடங்களுக்கே விற்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் இது கஷ்டம். ஆகையால் இப்பயிர்களுடன் குறைந்த எங்கள் மூதாதையர் பயிரிட்ட சாமை, தினை, குரக்கன், மரவள்ளியைப் பயிரிடலாம் இவ்வுணவுப்பொருள்கள் நமது தேவைக்கே உதவலாம். இதனால் நாம் விலைக்கு வாங்கும். உணவுப் பொருள்களைச் சிறிதளவாயினும் குறைத்துக் கொள்ளலாம். பனம் பொருள்களைப் பழைய காலம் போல கூடக்கூட உபயோகிக்கலாம்.

அடிக்கடி எரிபொருள் பற்றாக்குறையிருப்பதால் உரிய நேரத்தில் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல் பாதிக்கப்படுகிறது. எனவே பழையபடி துலாவை உபயோகிக்க நாம் முன்வரவேண்டும். துலா மிதிப்பதை மறுபடியும் பழகவேண்டும். ஒவ்வொரு கிணற்றுக்கும் துலா இருக்கவேண்டும். எது எங்களைக் கைவிட்டாலும் எங்கள் கை எங்களைக் கைவிடாது. நெருக்கடியைச் சமாளிப்போரே விவேகிகள்.

இக்கட்டான வேளைகளில் மாத்திரமன்றிச் சாதாரண வேளைகளிலும் எங்களிடம் இருக்கும் பொருள்களைப் பங்கிட்டு வாழவேண்டும் கடையில் ஒரு பொருள் குறைவாயிருந்தால் எல்லோரும் குறைவாகவே வாங்க வேண்டும். ஒரு சிலர் முழுப்பொருளையும் வாங்கினல் மற்றவர்கள் மிகவும்பாதிக்கப்படுவார்கள். இது மனிதத்தன்மையல்ல. நாமும் வாழவேண்டும் மற்றவர்களும் வாழவேண்டுமென்று நினைக்க வேண்டும்.

* தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்போம்
* குரக்கன், சாமை போன்றவற்றை உற்பத்தி செய்வோம்
* பனையின் பயனை அனுபவிப்போம்

இரண்டாம் உலக யுத்தத்தின் போது இலங்கையில் அரிசிக்கு மிகவும் தட்டுப்பாடு நிலவியது. அக்காலத்தில் நான் யுத்தகளத்தில் கடமையாற்றினேன். கொழும்புக்குச் செல்லும் சமயங்களில் அரசாங்க உத்தரவுடன் ஒரு கொத்து அரிசி எடுத்துச்செல்வேன். அவ்வளவு உணவுக்கஷ்டம் அதனால் நான் தங்கும் வீட்டில் உள்ளவர்களுக்குக் கஷ்டம் கொடாமல், இப்படிச் செய்தேன். அதுபோல் இப்பொழுது யாழ்ப்பாணம் செல்பவர்கள் ஏதோ இரண்டு கொத்து அரிசி ஒரு ருத்தல் பருப்பு என்று ஏதாவது கொண்டுசென்றல் மிகவும் உதவியாயிருக்கும். சிலருடன் இதைவிட்டு உரையாடினேன். சிலர் சம்மதித்தார்கள். மற்றவர்கள் இதென்ன மிகவும் குறைவான அரிசி பருப்புத்தானே. இம்முறையில் போகும் என்றுர்கள். அதற்கு நான் சிறுதுளி பெருவெள்ளம் என்பதைமறக்கக்கூடாது. இப்படிச்செய்பவர் எல்லோரும் கொண்டு சென்றால் ஒரு தொகையாயிருக்கும் என்றேன். இப்படிக்கொண்டு போவது உய்யும் வழியில் ஒன்று.

இன்றைய நிலையில் தவிர்க்கக்கூடிய பிரயாணங்களைத் தவிர்க்கவேண்டும். காலம் திருந்தும்வரையும் பிரயாணங்களை கட்டுப்பாடுடன் எத்தனிக்கவேண்டும். ஏழு எட்டு ஆண்டுகளுக்குமுன் நான் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு நூல் எழுதிக்கொண்டிருந்தேன். அத்தருணத்தில் ஒரு பேராசிரியர் கூறினர். தான் லண்டனுக்குப்போய் இரண்டு ஆண்டுகளாகி விட்டன வென்று. லண்டன் ஒக்ஸ்போட்டிலிருந்து ஐம்பத்தெட்டு மைல் தூரமே. பிரயாணம் ஒருமணி நோம்தான் எடுக்கும். அப்படியிருந்தும் இப்பேராசிரியர் இரண்டுஆண்டுகள் அங்கு போகவில்லை. நான் ஆச்சரியப்பட்டு என்ன காரணமென்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னர். தனக்குத்தேவையான எல்லாம் ஒக்ஸ்போர்ட்டிலேயே உண்டு; அதனல் லண்டனுக்குப்போக தேவையில்லையென்ருர். நாமும் இப்பேராசிரியரைப்போல் தேவையிருந்தால் மட்டும் ஒரு பிரயாணத்தைத் தொடக்குவோம்.

பல கிராமங்களிருந்து பட்டினப்பாடசாலைகளுக்கு மாணவர் போவது வழக்கம் இதனல் பிரயாணக் கஷ்டமுண்டு. அத்தோடு சிலமாணவர்கள் தங்கள் தங்கள் கிராமபாடசாலையில்கற்காமல் அப்பாடசாலைகளின் தரத்தை உயர்த்தக்கூடிய வாய்ப்பைக் கொடுக்கிருர்கள் இல்லை. இக்கட்டான இன்றைய நிலையில் பார்க்கும் பொழுது தத்தம் கிராமப் பாடசாலையில் பிள்ளைகள் படித்தால் பிரயாணம் மற்றும் வசதிக்குறைவுகளைத் தவிர்க்கலாமென்று தெரிகிறது பல மக்கள் ஒரு கூப்பிடுதூரம் போவதென்ருலும் பஸ்ஸில் பிரயாணம் செய்கிருர்கள்.

அக்காலத்தில் நாமெல்லோரும் நடந்தே பயணம் செய்தோம். இதனல் தேக ஆரோக்கியத்திற்கு நலமேற்படுகிறது மற்றது பஸ்ஸை நம்பி வாழத் தேவையில்லாமலும் போகிறது கிராமங்களில் எங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கக் கூடியதாயிருந்தால் பொருள்கள் வாங்குவதற்குப் பட்டணம் போகத்தேவையில்லை.

இக்கட்டான நிலையில் ஒரு தேவையான பொருள் இல்லாவிட்டால் வேறு ஒரு மாற்றுப் பொருளை உபயோகிக்க நாம் பழகவேண்டும் ஒரே பொருளை நம்பி ஒரு கருமத்தை எப்பொழுதும் முடிக்க எத்தனிக்கப்படாது. உதாரணமாக அரிசி குறைவாயிருந்தால் கிடைக்கக்கூடிய வேறு உணவுப்பொருள் பனம் பண்டம் அல்லது மரவள்ளியை உண்ணலாம். ஜப்பான், மலேசியா சிங்கப்பூரை 1942ம் ஆண்டு தொடக்கம் 1945 வரை தனது ஆதிக்கத்தில் கொண்டு வந்த பொழுது அங்கு வசித்த எங்கள் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆனல் பட்டினியால் ஒருவரும் இறக்கவில்லை. எல்லா வீட்டுவளவுகளிலும் மரவள்ளி நாட்டியிருந்தார்கள். வேறு உணவுப்பொருள்களையும். உற்பத்திசெய்தார்கள் தமிழையும் சமயத்தையும் வீடுகளில் சிறு பள்ளிக்கூடங்கள் வைத்து சிறுவர் சிறுமிகளுக்குப் புகட்டினர்கள். வல்லமை உள்ள இனம் எதையும் சமாளிக்கும். மகாபாரதத்தில் தர்சப் பொய்கைக்கருகில் நடந்த சம்பாஷணையை இங்கு கவனிப்போம். அபாயத்திலிருந்துமனிதனைத்தப்புவிக்கும் எது? யமன் கேட்ட பொழுது தருமபுத்திரர் 'துணிவு' என்று பதில் கூறினர். வைக்கோலுக்கு மெலிவானதென்ன வென்று யமன் வினவிய பொழுது தருமபுத்திரர் கவலையுள்ள இருதயம் என்ருர், இச்சம்பாஷணையைக் கவனித்தால் கவலையுள்ள இருதயத்தை விட்டுத்துணிவுடன் வாழ்வை எதிர் நோக்கினேமேயானல் எதிர்காலத்திற்குப் பயப்படத்தேவையில்லை என்பது புலப்படுகிறது.

ஒவ்வொரு இரவும் ஊரடங்குச் சட்டத்தால் வழக்கமாகச் செய்யும் சில கருமங்களைச் செய்யமுடியவில்லை. இதையிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. இந்தக் கட்டுப்பாட்டால் நாம் இந்த நேரத்தை எப்படி உபயோகிக்கலாமென்று யோசிக்க வேண்டும். வாசிக்கிறவர்கள், திட்டமிட்டு ஏதாவது உபயோகமுள்ள விடயங்களைப் பற்றித் தொடர்ந்து வாசிக்கலாம். மற்றவர்கள் ஏதாவது குடிசைக்கைத் தொழிலைச் செய்யலாம். பனம் ஓலையால் பாய் பெட்டி கடகம் முடையலாம். நேருஜி பாரதத்தைப் பற்றிய சிறந்த நூலைச் சிறையிலிருந்துதான், எழுதினர்.

நான் இரண்டாம் உலக யுத்த காலத்தில் இங்கிலாந்தில் சீவித்தேன் எவ்வளவு கஷ்டம் வந்தபொழுதும் பிரிட்டிஷ் மக்கள் மனதில் கவலையிருந்தாலும் வெளியில் நகைச்சுவையாய் பேசி வாழ்ந்தார்கள். இம் மனநிலை ஒரு சமூகத்தின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தேவை. ஒரு சமயம் கேம்பிறிட்ஜில் எனது நண்பன் கந்தையா என்னை இரவு நேரம் சந்தித்து விட்டு. வீடு திரும்பினர். சண்டைக்காலமானபடியால் தெருவில் விளக்குகளில்லை. அதோடு போகும் வழியில் ஒரு வெளியையும் கடக்கவேண்டும். வெளியில் பாதி தூரம் சென்றதும் யாரோ பின்னுக்கு வருவது போல் தோன்றவே, இவர் ஓடத் தொடங்கினர். அப்பொழுது பின்னுக்கிருந்து ஒருவர் குரல்கொடுத்தார். ''ஓட வேண்டாம். பயப்படவேண்டாம். நான் பொலிஸ்காரன் ஜர்மன் அல்ல'' என்று அக்குரல்கேட்டதும் நண்பன்கந்தையாவும் பொலிஸ்காரனும் சிரித்துவிட்டுத் தத்தம் வழியாகச் சென்றுர்கள். இதுதான் வாழும் வழி— அதாவது ஒரு கஷ்டமான நிலையிலும் சிரிப்புடன் வாழுதல்.

இதுபோன்ற சந்தர்ப்பத்தில் நடந்த இன்னுமொரு விஷயத்தை இங்கு கூறுகிறேன். அநேகமாக கேம்பிறிட்ஜில் காலையில் விரிவுரைக்குச் செல்லும் வழியில் ஒரு வயோதிபப் பெண்மணியை நான் சந்திப்பது வழக்கம். இங்கிலாந்து போன்ற குளிர் நாடுகளில் காலையில் ஒருவரைச் சந்தித்தால் அன்று நாள் எப்படி என்று கேட்பது வழக்கம். (அதாவது குளிரானதா வெப்பமானதா) அல்லது குளிர். நான் அம்மாதைச் சந்தித்தும் இன்று தாங்கமுடியாத குளிர் என்றேன் இவர் போல்லாத நாள் என்று நான் எதிர்பார்த்தேன்! ஆனல் அம்மாது ''இது மிகவும் நல்லது இப்படிப்பட்ட குளிரில் ஜேர்மன் வந்து சண்டை செய்யமாட்டான்'' என்றுர். உண்மையாக இது ஒரு அற்புதமான மறுமொழி. இக்கட்டான நிலையிலும் ஹாஸ்யமான சொன்னர் அவர்

இரவும் பகலும், பௌர்ணமியும் அமாவாசையும் மாறி மாறிவரும். அதேபோல் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். இன்பத்தில் ஏமாறுதல் இருக்கவேண்டும். துன்பத்தைத் தாங்கக்கூடிய வல்லமை வேண்டும். எந்நிலையிலும் மனம் தளராது. செய்யக்கூடிய கருமங்களைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

எங்கள் தலை சிறந்த பொக்கிஷமாகிய கல்வியைப் பேணிக் காக்கவேண்டும். நாம் உய்யும் வழிகள் பல எல்லா வழிகளுக்கும்மனத்திடம் தேவை.

நா. மாணிக்க இடைக்காடர்

## எம்மனத்திடை வாழ்வார்

சுந்தர் என்ருெரு மாபெருஞ் சோதி
தோன்றிற் றன்று உரும்பராய் தன்னில்
சிந்தை கொண்டது கல்விக் கடலை
செப்ப மாகவே நீந்திக் கடந்து
விந்தை பற்பல செய்தது வாழ்வில்
வேந்தன் போற்றலை யென்றும் நிமிர்ந்தே
பந்தை விட்டு எறிபவர் போல
பதவி விட்டது பாரவர் போற்ற

அரச அதிபர் பதவியை விட்டும்
ஆனநல் மந்திரிப் பதவியை விட்டும்
தரமு யர்ந்த கணிதப் பேராசான்
தன்சிறப் புள்ள பதவியை விட்டும்
உரமி குந்த மனநிலை கொண்டு
உறுதி யாய்ப்பொது வாழ்வினை வேண்டி
சிரமங் கொண்டு பொதுநலத் தொண்டு
சிறப்ப தாகவே செய்தது என்றும்

வீரம் மிக்கநற் காண்டீபன் போல
விறல்மி குந்த வீரச் செயல்கள்
காரம் மிகுவெழிற் பேச்சினில் வன்மை
கலங்கா நெஞ்சங் காரியக் கெட்டி
ஆரணன் போல்நடை ஆண்மை அஞ்சாமை
ஆற்றல் அறிவு என்பன கொண்ட
ஊரன் எனுந்திருப் பொலிவையுங் கண்டோம்
உத்தமன் சுந்தர் உருவினில் நாங்கள்

இறப்பு வந்தது சுந்தர் இன்றெம்மோ
டில்லை யென்பது மிக்க கவலே
சிறப்பு இழந்தனம் தமிழர்கள் இன்று
செல்லப்பா தந்த சுந்தரை விட்டு
பிறப்பு வேண்டிடிற் சுந்தரரைப் போல
பிறத்தல் வேண்டும் மதிநலத்தோடு
மறப்பு என்பது எந்தமக் கேது
மன்னன் சுந்தரம் மனத்திடை வாழ்வார்

உரும்பராயூர் செ. ஐயாத்துரை.

## கழிவிலே காசு

கழிவிலே காசு. அழிவிலே ஆக்கம். குப்பையிலே கோடிபொன். இவ்வாறெல்லாம் ஆக்கபூர்வமாகக் கூறிக்கொள்ளும் வகையில் மரங்களில் இலைகள்பழுத்துப்பொன்னிறத்தனவாய்ப் பொலபொல என்று விழுந்து குவிகின்றன. எங்கள் மூதாதையர் தங்கள் வளவுகளில் ஒரு மூலையில் அகலமான குப்பைத் தொட்டி கட்டி அதற்குள் குப்பை கூளங்கள் மாட்டுச் சாணங்கள் யாவற்றையும் இட்டுக் சேமித்து வருடந்தோறும் வயல்களிற் பயன்டுத்தி வந்தார்கள்

''வாடியுதிர்ந்த மலரைக் கண்டு வாழ்வை நம்பவா'' என்று கேட்டவருக்கு. ''உதிர்ந்த இலைகள் உரமதாகும்'' என்று சுத்தானந்த பாரதியார் அவர்கள் பாடிவிளக்கியுள்ளார். இது விஞ்ஞான நுட்பமுமாகும்.

எங்கள் வறண்ட பிரதேசத்தில் நமக்கு வாழ்வளிப்பன தாவரங்கள். இத் தாவர சங்கமங்கள் இறைவன் தந்தருளிய அருட்கொடை தாவரங்கள் ஆண்டுதோறும் உபகரிக்கும் உபகரிப்புகளுள் உதிர்க்கும் இலைகள் சருகுகளும் ஒரு சில. இவற்றைக் குப்பை எனக்கூட்டி ஒதுக்கி அப்புறப்படுத்தி அகற்றிவிட்டு இரசாயன உரக் கலவைகளை நம்பி விவசாயம் செய்ய முயல்வது புத்திசாலித்தனமாகாது. தரமான பசளை தாவரக் கழிவுகள். இவற்றைப்பயன்படுத்தி விளைவு செய்து காசு தேடுதல் முறையானதாகும்.

நன்றி: மில்க்வைற்

தவறுன தராசு எடையாலும், பொய்யான விலையாலும், உள்ளதைப் பதுக்கிவைப்பதாலும் பொதுமக்களை வஞ்சிப்பவன் நீசன்.

- பஞ்சதந்திரம்.

# இலக்கியச்சந்தி

# ஈழநாடு-யாழ். இலக்கிய வட்டம் இணைந்து நடாத்திய இலக்கிய அரங்கு

**1985**.03 06-ம் திகதி புதன்கிழமை காலையிலிருந்தே ஈழநாடு காரியாலயம் பரபரப்புக் கொண்டது எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், பத்திரிகையாளர்கள், இரசிகர்கள், படித்தோர், பதவியால் உயர்ந்தோர் என வந்து கொண்டிருந்தார்கள். தற்கால நெருக்கடி நிலமையில் விழா அமைப்பாளர்களே எதிர்பார்க்காத பெருந்திரளான கூட்டம். மொழிக்கோ, இனத்திற்கோ ஆபத்து ஏற்படும் காலங்களில் மக்கள் ஒன்று கூடி போராடுவது என்பது வரலாற்று நியதி. அந்த நியதியிங்கு நிதர்சனமாகின்றதா என எல்லாரும் வியந்தே போனுர்கள்.

யாழ் இலக்கியவட்டமும் ஈழநாடும் இணைந்து நடாத்திய இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டிப் பரிசளிப்பு வைபவமும், ஈழநாடு வெளியீடான செங்கை ஆழியான் எழுதிய 'கடல் கோட்டை' நாவல் வெளியீட்டு விழா வைபவமும் ஒரே அரங்கில் நடைபெற்ற- இலக்கிய விழா தான் இவர்களை ஒன்று கூட வைத்தது.

ஈழநாடு-நிர்வாக ஆசிரியர் திரு. ந சபாரத்தினம் அவர்கள் தலைமையில் திரு. ஐயா சச்சிதானந்தம் வரவேற்புரை நவில முதல் நிகழ்ச்சியாக பரிசளிப்பு விழா ஆரம்பமாகியது.

பரிசளிப்புரையை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களும்' செம்பியன் செல்வன் அவர்களுமாக இரு வேறுபட்ட கோணங்களில் நிகழ்த்தினர். டொமினிக் ஜீவா அவர்கள் தமது உணர்ச்சிகரமான பேச்சில், ''ஈழத்து எழுத்து ஒன்றில் தான் அன்றும் சரி, இன்றும்சரி அனுபவமும், ஆக்கமும் ஒன்றிணைந்து உயிர்த்துடிப்பாக விளங்குகிறது ஈழத்து எழுத்தாளன் ஈழத்து மண்ணில் காலூன்றித்தான் எழுதுகிறுன். வாழ்க்கை நடாத்துகிறுன். ஆனல், பிற நாட்டில், பிற மாநிலங்களில் வாழ்பவர்கள் அந்நிய மண்ணில் நின்றுகொண்டு தான் பிறந்த மண்ணைப்பற்றிஎழுதுகிறுர்கள் இது இலக்கியத்தின் தரத்தை ஒருபொழுதும் உயர்த்தாது. இன்று நாடோறும், நாடு தோறும் நிகழும் சம்பவங்கள் எழுத்தாளர்களுக்கு எத்தனை எத்தனையோ ஆண்டுகளுக்கு எழுதுவதற்கான கருப்பொருள்களை நல்கி வருகின்றன... எழுத்தாளர்கள் இன்று துணிவாக தத்தம் பிரச்சினைகளை நேருக்கு நேர் நின்று துணிச்சலுடன் எழுதி வருகிறுர்கள்.

இந்தத் துணிச்சல் நிறைந்த யதார்த்தமான உணர்ச்சி எழுத்துக்கள் நாளை ஈழத்து எழுத்தாளனுக்கு நோபல் பரிசை பெற்றுத்தரப் போகிறது. இந்த உண்மையை குறுநாவல் போட்டி பரிசு நாவல்கள் நமக்கு நன்குணர்த்துகின்றன.'' என்று குறிப்பிட்டார்.

பரிசளிப்புரையின் போது செம்பியன் செல்வன், ''இவ்விழா இயல்பாகவே இலக்கியத்தின் மூன்று முக்கிய நிலைகள் கொண்டு அமைந்துள்ளது. இரசிகமணி, இலக்கிய வட்டம், ஈழநாடு ஆகிய மூன்றும் ஒன்றிணைகின்றதென்றுல், இரசிகர், எழுத்தாளர், பத்திரிகை என்ற மூன்றும் இணைகிறதென்றுதான் அர்த்தமாகிறது. இரசிகமணி யாழ். இலக்கிய வட்டத்தின் முக்கிய குரலாக வைத்தது நமது நாடு: நமது நூல்; நமது எழுத்தாளர்' என்பது. அதன் வழியில்தான் இத்தகைய குறுநாவல் போட்டிகளை நடாத்திவருகிறேம். இது மட்டுமல்ல மற்ற இலக்கிய வடிவங்களையும் பாராட்டிப் போற்றும் முகமாக, இதன் இன்னெரு அமைப்பாக உள்ள

இலக்கியப் பேரவை'யின் மூலமாக நாவல், கவிதை, நாடகம், காவியம் எனப்பலபிரிவுகளுக்கு ரூ 1000 வீதம் வழங்கிக் கௌரவிக்க இருக்கிறேம். ஈழத்து எழுத்துக்களை உடனுக்குடன் வெளியிட்டும்எழுத்தாளர் இயக்கங்களின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கியும் எழுத்தாளர்களுக்கு அவர்களின் திறனை அறிந்து முன்னுரிமைகளை வழங்கியும். ஏன் அவர்களின் படைப்புக்களை நூலுருவில் கொணர்ந்து விநியோகம் செய்வதிலும் இன்று முன்னணியில் திகழ்வது ஈழநாடு தாபனமாகும். எனவே இம்மூன்றின் இணைப்பின் பின்னணியில் குறுநாவல்களை நோக்கும் போது எழுத்தாளர்கள் முன்பு தமது சமூகம் என்கின்ற கட்டுக்கோப்பை மிகவும் குறுகிய எல்லைக்குள் கொண்டிருந்தனர். ஆனல் இன்று அவர்கள் பார்வையில் சமூகம் நாடாகவும் உலகாகவும் பிரிவடைந்துவிட்டதன்மையை எமது குறுநாவல் போட்டியில் கலந்துகொண்ட நாவல்கள் காட்டுகின்றன.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் நெருக்கடி நிலைமை காரணமாக வருகை தரமுடியாமல் ஆசியுரையை எழுதி அனுப்பியிருந்தார். கடல்கோட்டை மேனுட்டு வரலாற்று நூல்களுக்கு இணையாக நாவல்சுவை சொட்டச் சொட்ட எழுதப்பட்டுள்ளது இது ஈழத்து எழுத்துலகிற்கு கிடைத்த வரப்பிரசாதம்' எனப்பாராட்டி ஆசியுரை எழுதியிருந்தார். இதனை செம்பியன் செல்வன் வாசித்தளித்தார்.

'கடல்கோட்டை' நாவலின் ஆய்வுரையை முதலில் திரு எஸ் சிவசரவணபவன் (சிற்பி) அவர்கள் நடாத்தியபோது செங்கையாழியானின் முன்னைய வரலாற்று நூல்களான நந்திக்கடல், சித்திரா பௌர்ணமி, என்பனவற்றைக்குறிப்பிட்டு அவற்றின் அமைப்பு முறைகளில் இருந்து இந்த நாவல் முற்றாக மாறியுள்ளது என்றும் மக்களின் இனவுணர்வுகளையும், முன்னைய வாழ்க்கை முறைகளையும் சிந்திக்கும் மனநிலைகளையும் தூண்டும் வண்ணம் கடல்கோட்டை எழுதப்பட்டுள்ளது. எனக் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் ''கடல் கோட்டை'' என்ற நூல் தமிழிற்கு புதிதாக அறி

தனது வாழ்க்கை நிலையின் ஒவ்வொரு கட்டத்திலும் தாம் சந்திக்கின்ற பாதிப்புக்கொள்கின்ற சங்கதிகளையெல்லாம் துணிச்சலாக எழுதுகின்றனர். தனது சொந்த வாழ்வில் எத்தகைய தீயவிளைவினை அவை ஏற்படுத்தக்கூடும் என்பதனை நன்குணர்ந்தும் சத்தியவேள்வியாக எழுதுகின்றனர். தற்கால நெருக்கடி நிலைகளைக்கூட அவர்கள் எழுத்தில் கையாண்டாலும் அவற்றினை வெளியிட ஏற்ற களம் கிட்டாமையால் அவையாவும் 'தலைமறைவு இலக்கியங்களாகவே' பிரசவிக்கின்றன... முன்பு பல சிற்றேடுகள் நமது உணர்ச்சிகள்: பிரச்னைகள் அரசியற் கருத்துக்கள் அவற்றினைக் கருக்கொண்ட எழுத்துக்களை வெளியிட்டு தமிழகத்திற்கும் அனுப்பப்பட்டு வந்தன. இதனல் நம்மை அவர்களால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. அந்தப் புரிந்துகொள்ளல் கூட இன்றைய அகதிகள் நிலைக்கு ஓரளவு நன்மையளிக்கின்றன... என்று கருத்துத்தெரிவித்தார்.

பரிசிலுரைகளைத் தொடர்ந்து பரிசீட்டிய து. வைத்திலிங்கம் முதற்பரிசினை பெற்றுக்கொண்டார். பரிசில் பெற வேண்டிய நெல்லை. க. பேரன் அவர்கள் வரும் வழியில் ஏற்பட்ட நெருக்கடியால் பரிசு பெற வந்து சேரமுடியவில்லை. பாராட்டுப் பெற்றவர்களுக்குச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இரண்டாம் நிகழ்ச்சி - கடல் கோட்டை நூல வெளியீடு ஈழநாடு ஆசிரியர் திரு பி. எஸ். பெருமாள் தலைமையில் ஆரம்பமாகியது. செங்கை ஆழியானின் எழுத்துத்திறமையையும், அவரின பரந்த வாசகர் தொகையையும் குறிப்பிட்டுப் பேசிய திரு பெருமாள் மேலும் பல வரலாற்று நாவல்களைபடைக்கவேண்டும்என்றுர்

முதற் பிரதியை சிவநெறிக் காவலர் திரு. க. கனகராசா அவர்கள் வாங்கிக் கௌரவித்தார்கள்.

முகம் செய்யப்படுகிறது. இந்நூல் நாவலுமன்று; வரலாறுமன்று; வரலாறு தழுவிய நாவல் சரித்திரமுமன்று இவை எதுவுமற்ற புதிய-கலைவடிவம். மேனுடுகளில் - என்டபே தாக்குதல் போன்ற - சுவை மிக்க பராக்கிரமச்செயல் நிறைந்த நிகழ்ச்சிகள் நடந்தேறியதன் பின், அந்நிகழ்ச்சிகளுடன் தொடர்பு கொண்டிருந்தோரின் வாய்மொழிகள், அனுபவங்கள், ஆவணங்கள் என்பவற்றைத் திரட்டி, சுவைபடக்கூறும் புதிய பத்திரிகைத்துறை (Neo-Jonurnalism] எழுத்து தோன்றியுள்ளது.' அதனடிச்சுவட்டில் 'கடல் கோட்டை' எழுந்துள்ளது என்றுர்.

வரலாற்று அறிஞரும், கலாநிதியுமான சி. க. சிற்றம்பலம் அவர்கள்-, இந் நாவல் தமிழரின் தம் பண்பாட்டினையும், வீர மரபினையும் உணர்த்தி நிற்கிறது. குவைறேஸ், சுவாமிகள் போன்ருேரின் குறிப்புகளைக் கையாண்டு பழந்தமிழர் வாழ்வை சேர்த்திருக்கும் பாங்கு போற்றற்குரியது. பழந்தமிழரின் ஈழவள ஆட்சிக்கு சான்றுக இருந்த பல கோவில்கள், ஆவணங்கள் என்பன அழிக்கப்பட்டாலும் இன்றும் கிடைக்கப்பெறும் விடை பொறித்த சேது நாணயம் அழிவுக்காரரின் சூதினையும் வென்று எங்களுக்கு உணர்வூட்டுகின்றது. இவ்வுண்மைகள் வரலாற்றுச் சக்கரம் சுழல்வதை நிதர்சனமாக்குகின்றன என்றுர்.

இறுதியாகப் பேசிய கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை. இந்த நாவல் சுவாரஸ்யமானது. ஜனரஞ்சகமானது. உண்மை வரலாறுகொண்டது. எல்லாத்தரப்பாரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் எழுதப்பட்டது. இதுவே இந்நூலின் பரவலான வெற்றிக்கு காரணம்' என்றுர்.

யாழ். இலக்கியவட்ட இணைச் செயலாளரில் ஒருவரான வே. குமாரசாமியின் நன்றியுரையுடன்கூட்டம்முடிவடைந்தது.

# தாடி ஆடு

மீண்டும் சிறுவர் இலக்கியம் பற்றிப் பேச அது பற்றிய உரத்தசிந்தனையை ஏற்படுத்த வாய்ப்பளித்தது 'தாடி ஆடு' என்னும் சிறுவர்களே நடித்த சிறுவர் நாடகம். 85-03-05 ம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள கைலாசபதி அரங்கில் டொன் பொஸ்கோ வித்தியாலய மாணவரால் நடித்துக் காட்டப்பட்ட இந் நாடகம் ஈழத்தில் சிறுவர் அரங்கு ஒன்று ஆரம்பிப்பதற்குக் கால்கோளாக அமைந்தது.

'சிறுவர் அரங்கு' ஒன்றினைத் தோற்றுவிக்க வடமாநில கல்வித் திணைக்களமும், அதன் வட்டாரக் கல்வியதிகாரிகளும் எடுக்கும் முயற்சியாக மட்டும் அமையாது சிறுவரின் உடல், உள வெழுச்சிகளின் உற்சாகமிக்க, மகிழ்ச்சி வடிகால்களாகவும், அதே வேளையில் அவர்களின் ஆளுமை விருத்தி சார்ந்த தனித்துவத்தை மேம்படுத்த உதவும் செயற்பாடாயும் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

டொன்பொஸ்கோ வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பு வரைபடிக்கும் மாணவர்கள் மட்டுமே கலந்து கொண்ட இந்த நாடகம் பல்வகைச் சிறப்புக்களைக் கொண்டுள்ளது

சிறுவர்களுக்கு ஏற்ற கதை. சிலசொற்களை மட்டும் அடிகளாகக்கொண்ட எளிய பாடல்கள்: அவற்றுள் பல அவர்கள் பாடநூல்களில் இடம்பெறும் நீதிநெறிகள் இயல் பான இசை எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவர்கள் ஆர்வத்துடன் நாடக பாத்திரங்களுடன் ஒன்றிவிடச்செய்ய வல்ல ஆடல், கூத்து, என்பன.

கல்வி என்பது பாடநூல்களிலும், அவற்றின் பாடத்திட்டங்களிலும் மட்டுமே உள்ளது என்ற கருத்து இன்னமும் கற்றறிந்தோர் மத்தியில் இருந்து முற்றாக விடுபடவில்லை. கல்வி இயல்பாக மாணவரின் எல்லா நிலைகளிலும், அவர்களின் அனுபவ வெளியீடுகளின் தரவுகளாகவே மனதில் நிலைக்கவேண்டும். அப்போதுதான் அக் கல்வி 'ஆக்கவியற் கல்வி' யாக மாறும். ஆராய்வூக்கம் அதிகரிக்க அதிகரிக்க கல்வியானது ,நித்தியத்தின் சத்தியத்தை' தேடும் மெஞ்ஞானியாகமாணவனை மாற்ற உதவும் கருவியாக மாறும். அஃதன்றி பாடநூல்களின் மனன வரிகளின் சக்தி மாணவனின் உயர்வுக்கோ, அது சார்ந்த சமூக உயர்வுக்கோ எக்காலத்திலும் உதவுவதில்லை. அதற்குமாருக ஆடல், பாடல் நிறைந்த கலை நிகழ்ச்சிகளும், விளையாட்டுக்களும் மாணவரின் உடல், உள்ள, தசை, மூளை வளர்ச்சிக்கும், சிந்தனை ஊட்டத்திற்கும் உறுதுணையாகின்றன. மொன்ரிசூரி அம்மையார், தந்தை பெஸ்டலோசி போன்ருேரின் 'குழந்தைகள் பூங்கா' வும் வசீலி சுகோம்லின்ஸ்கியின் 'ஆனந்தப் பள்ளி (School of Joy)யும் இந்த உண்மையையே வற்புறுத்துகின்றன.

முப்பதளைந்து பிள்ளைகள் பங்கு பற்றியஇந்நாடகத்தைக் குழந்தைகளுக்கு சமமாகநின்று இரசித்தவர்கள் நன்கு படித்து, உயர் நிலையில் வாழும் பெரியவர்களும் தான். அவர்களின் சமூக இறுக்கம்,சூழல் கட்டுப்பாடு தளர்ந்து மனம்இரசித்து விட்டுச்சிரித்து மகிழ்ந்ததைக் கண்டபோது அவர்கள் முகம் அழகாக மிளிர்ந்ததையும், இரத்தஅழுத்தம் சீராகஓடும்அமைதிப் பொலிவையும் காண முடிந்தது. 'குழந்தைகளுக்காக வாழ்வோம்'' என்பது குழந்தைகளாகவே வாழ்வோம் என்ற மனநிறைவையும் காண முடிந்தது.

மேனுடுகளின் 'சிறுவர் நாடக அரங்கு' பற்றி ஒரு சர்ச்சை நிலவுகிறது. சிறுவர்கள் நாடகங்களில் நடிக்கக் கூடாது; அது தவறு; பெரியோர்களின் மாதிரியாக அவர்கள் உணர்வுபூர்வமாக மாறிவிடுவது அவர்களின் வளர்ச்சியைத் தடை செய்துவிடும். என்பது ஒருசாரார் கருத்து. அது தவறு. குழந்தைகள் என்போர் மனிதனின் சிறிய உருவே. அவர்களிடம் ஒரு வளர்ந்த மனிதனிடம் நிலவும் சகல அம்சங்களும் தன்மைகளும் உள்ளன. அதனை ஆரம்ப நிலையில் இயல்பாக வளர்த்து விடுவது அவனது பிற்கால வளர்ச்சிக்கு உதவும்'-என்பது இன்னேர் சாரார்கருத்து. ஆனல், கீழைத் தேயத்தவர்களான நமக்கு இது ஒரு பிரச்சனை அல்ல. சாஸ்திரீய நடனம், சங்கீதம் போன்றவற்றை நம் நாடுகளில் இளவயதினிலே கற்று அரங்கேற்றமும் செய்து விடுகிறுர்கள். நாடகத்தை விட நடனம் பல நிலைகளில் பொறுப்பு மிக்கது. நடனமாடுபவர் பாவனரீதியில் தானே ஒரு பௌதிக உலகத்தைச் சிருட்டித்து, அதில் நடனமாடும் மானிடமாக, பறவையினமாக, மரஞ்செடி கொடிகளாக மாறி ஒரு கதையை, சம்பவத்தைச் சித்திரிக்கின்றுர் 'கண்ணன்-ராதா' போன்ற ஜீவாத்மா - பரமாத்மா விடயங்கள் இளவயதுக்குமேற்பட்டதாயினும். அதன் பொருருள் புரிந்து அபிநயம் செய்வதும், செய்து வருவதும் கலாரீதியான ஒரு வளர்ச்சியையே நல்கி வருவது கண்கூடு.

'தாடி ஆடு' நாடகத்தின் தயாரிப்பாளர் கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் இந்த உண்மையை உள்வாங்கி ஆடல், பாடல், கதை-யாவற்றையும் மரபு முறையையும் நவீன நாடக முறைகளையும் ஒன்று கலந்து அளித்துள்ளார் இதில் குழந்தைகள் பாடகர்களாக, மிருகங்களாக, மரங்களாக, பாறைகளாகக் கூட நடித்தனர் நடித்தனர் என்பதை விட மனம் ஒன்றிப் பங்கேற்றனர். அவர்கள் நடிக்கும் போது நிச்சயமாக அவர்கள் அவையோரை முற்றுக மறந்து தத்தம் செயற்பாட்டில் மனம் ஒன்றி ஈடுபட்டார்கள். இதுவே நாடகத் தயாரிப்பாளரின் மாபெரும் வெற்றி எனக் கருதுகிறேன்.

நாடக நெறியாக்கத்தில் பெரிதும் பங்கேற்றவர் திரு. க. சிதம்பரநாதன் அவர்கள். இவர்கள் நாடக உலகில் சிறப்பாக சிறுவர் நாடகங்களில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய பல முயற்சிகளில் பங்கேற்று வருபவர்.

'நாடக அரங்கக் கல்லூரி' யின் தலைவரான திரு ம சண்முகலிங்கம் (குழந்தை) அவர்கள் முன்னரே பெரியவர்களைக் கொண்டுநடிப்பித்த 'கூடி விளையாடு பாப்பா' நாடகத்தின் கர்த்தா இப்போதுதாடி ஆடு நாடகத்தின் ஒப்பனையாளர்கள் சிறுவர்கள் அனைவரும் தத்தம் பங்கைச் சிறப்பாக நிறைவேற்றினுர்கள்.

புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள். நாடகத்தை அரங்கேற்றப் பெருஞ்செலவினைச் சமாளித்தவர்கள் ஆயிற்றே.

நாடகம் முடிந்து வெளியே வந்தபோது தான், உள்ளே நிலவிய பெரிய வெக்கையை நாம் உணராது இருந்தோம் என்பது தெரியவர, சூரியன் கண்களைக் கருக்க வைத்தான்.

'ஜராதுஷ்டிரன்'

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி, கே.ஆர்.விஜயா, நடித்த
**கிரஹப்பிரவேசம்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-15, 12-15, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த
**நீதிபதி**
(கலர்)

MANOHARA
Daily 10-30, 2-51, 4-15
Muhammed Ali
in
BODY AND SOUL
(Strictly For Adults)
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும். பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

**யாழ். வின்சர் மினி**
7-3-85 வியாழன் முதல்
சிவாஜி-பிரபு-K.R.விஜயா ராதா நடித்த
**'சிம்ம சொப்பனம்'**
[கலர்]
தினசரி 10-30, 2-15

WINDSOR
இன்று முதல்
THE HOUSE WHERE EVIL DWELLS
Horror - Action-Thriller Suspense
Daily 10-30, 2-00, 4-15
கொல்லப்பட்ட கள்ளக் காதலன் ஆவிகள் அல்லற் படுத்தும் காட்சிகள்
(வயது வந்தவர்கட்கு மட்டும்)

**ரீகல் மினி**
தினசரி 10-15, 1-30
கமல்-ராதா-ரேவதி நடிக்கும்
பாக்கியராஜ் கதை வசனத்தில்
பாரதிராஜாவின்
**ஒரு கைதியின் டயறி**

**ரீகல்**
தினசரி 10-30, 2-00
JUNGLE WARRIORS
(Full of Action-Adults)
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)


## இன்று தவக்காலத்தின் 3வது ஞாயிறு துளிகள்

# ஆவியிலும் உண்மையிலும் ஆண்டவரைத் தொழுவோம்

காக்காமல் காக்கின்ற திருநாள் தன்னை
கடையாக்கித் தினந்தோறும் பொருள்பறித்தார்
தீக்காடு போன்றோர்க்கு இயேசுநாதர்
திருநாளின் பெருமைதனை எடுத்துரைத்து
வாக்காலும் செயலாலும் மாற்றம் காண
மனத்துள்ளே திடமான முடிவு செய்தார்

நாணயமாற் றுக்கடையைக் கீழே தள்ளி
நடத்தையிலா ரைச்சவுக்கால் அடித்தார் அங்கே
வேணவரை விலைபேசும் புறாவிற் போரின்
விரிவான கூண்டுகளைத் திறந்து விட்டார்
ஆணவத்தில் ஆடுகளை விற்போர் தம்மை
அடித்ததிலே அவர் கைதான் வலித்த தம்மா!

''என்னுடைய கோவிலிது பிரார்த் தனைக்கே''
என்றெழுதி இருப்பதனைப் படித்துச் சொன்னார்
''பொன்னமரும் இடத்தினிலே புறாவிற் றீரே!
புகழிருக்கும் பூமியிலே பொய்விற் றீரே!

இவ்வாறு கிறிஸ்து இறை மக்களைப் புனிதப்படுத்துவதில் அக்கறை காட்டியதனை கவிஞர் கண்ணதாசன் இயேசு காவியத்தில் வர்ணிக்கின்றார்.

இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் இறைவனின் ஆவியாகக் காணப்படுகிறான். அவன் தனியனாக தனிப்பிறவியாக அன்றி புனிதமான முறையில் மனித



னோடு மனிதனாகக் கூட்டுமனப் பான்மையோடு வாழ அழைக்கப்பட்டுள்ளான். அவன் மற்றவர்களை மதித்து மனித மாண்பிற்குமதிப்புக்கொடுத்து வாழ வேண்டியவனாகின்றான்.

''மனிதன் அடிப்படையில் சுயநலக்காரன் அவன் தன்னுடைய அனுபவத்தாலும் விசால மனப்பான்மையாலும் தன்னை வளர்த்துக் கொள்ளும் போது தான் மனிதன் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதி உள்ளவனாகின்றான்'' என்கிறார் எஸ். ராமசாமி சாஸ்திரிகள்.

ஆனால் இன்று நடைமுறை வாழ்க்கையில் பல மனிதர்கள் குறுகிய மனப்பான்மையோடு பிறரது அந்தரங்களில் அநா வசியமாகத் தலையிட்டு அவர்களது மன அமைதியினை நல் வாழ்க்கையினைக் கெடுக்கின்றார்கள். நொந்துபோன உள்ளங்களை மேலும் வெந்து போகச் செய்கிறார்கள் வாடுகின்ற மக்களுக்கு வாழுகின்ற பாதையினைக் காட்டாது சாகின்ற வழியினைக் காட்டுகின்றார்கள் பாசம் என்கிற போர்வை போட்டு மோசம் செய்கிறார்கள். பாவத்திலிருந்தும் பழிவாங்குதலிலிருந்தும் மனிதன் விடுதலை பெற முற்படுவதன் மூலமே பரிசுத்தரான பரமதந்தையினை நிஜமாகத் தொழும் வாய்ப்பினை

**வண. வின்சன்ற் பற்றிக்**

அவன் பெறுகிறான்.

''அப்பொழுது மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும் பரமதந்தையைத் தொழுவார்கள். ஏனெனில் தம்மைத் தொழும்படி தந்தை இத்தகையாரையே தேடுகின்றார் கடவுள் ஆவியானவர்: ஆதலால் அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும்தான் அவரைத்தொழுதல்வேண்டும்'' அரு 4: 23-24) என்கிறார் கிறிஸ்து.

## இந்துபோட்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என்ற திருவள்ளுவர் குறளுக்கமையத் திரு இராசரத்தினமவர்கள் சைவ நன்மக்களது கல்விப் பசியைப்போக்க முன்வந்து செய்த தொண்டினை நாம் இலகுவில் மறந்துவிட ஏது இலங்கை அரசாங்கம் முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்க அயராது முயற்சியும், கிளர்ச்சியும், பிரசாரமும் செய்தால் நிச்சயம் வெற்றியடையலாம்.

## ஒலிவர் ருவிஸ்ற்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கம் கூட்டத்திற்கு முன்னால் நாய்கள் குரைத்தபடி எகிறிக் குதித்து ஓடிவந்துகொண்டிருந்தன

''பையனைப் போட்டுவிட்டு ஓடுவதுதான் புத்தி'' என்று டோபி கிரக்கிட் கூறினான். அதைக் கூறிய கணமே முழு வேகத்தில் அவ்விடத்தை விடுத்து ஓட்டம் பிடித்தான். சைக்ஸ் சுற்றுமுற்றும் பார்த்தான் ஒரு சால்வைத் துண்டைப் பையன் மீது போட்டுவிட்டு அதேவேகத்தில் பறந்து சுவரைத் தாண்டி மறைந்துவிட்டான். துரத்தி வந்தவரும் தம் நாய்களைத் திருப்பிக் கூப்பிட்டபடி திரும்பிச்சென்றுவிட்டனர்

அன்றிரவு முழுவதும் ஒலிவர் அதே இடத்தில் ஸ்மரணையற்றுக் கிடந்தான் கடும் மழை பெய்து ஓய்ந்தது ஒலிவர் சகதியிலேயே கிடந்தான் விடிந்தபோது அவனுக்குச் சிறிது சிறிதாக அறிவு தெளிவுற்றது வலியினால் முனகியபடி விழித்தான். இடது கையில் பெருங் காயம்; சைக்ஸ் ஒரு துவாயால் அதைக் கட்டிவிட்டிருந்தான் மிகவும் பலவீனமுற்றிருந்தால் எழுந்து அமரவும் முடியாமலிருந்தான். [தொடரும்]

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் சில வருடங்களுக்கு முன் ஈழநாடு அலுவலகத்தின் மீது பெரும் தாக்குதல் நடத்தியும்வைத்த சீருடையினர், யாருக்கும் தெரியாமல் ஒரு நல்ல காரியமும் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள்போலிருக்கிறது. ஈழநாடு ஆசிரியர் தமது தலையங்கக் கட்டுரைகளை எழுதுவதற்காக ஏதோ ஒருவித விசேட 'மை'யையும் வற்றாத அமுதசுரபிப் பாத்திரத்தில் அவர்கள் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்போலிருக்கிறது.

அதற்குப் பிறகு ஈழநாடு தலையங்கங்கள் ஒரு தனி இலக்கியமாக வந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்போதெல்லாம் பத்திரிகை வந்ததும் முதற்பக்கச் செய்திகளைப் படித்துவிட்டு ஆசிரிய தலையங்கத்தைச் சற்று அமைதியாக இருந்துபடிக்கிறேன் ஓமோம்; அதைச் சிறிது ஆறுதலாகத்தான் படிக்க வேண்டும். ஏனென்றால் அந்த வசனங்களின் மேற்பரப்பில் என்னவோ இருக்கும். சற்று உள்ளே சுழியோடிப்போனால் முத்துக்கள் கிடைக்கும் (இது என்னுடைய அபிப்பிராயம் மட்டுமல்ல; வேறு பல வாசகர்களும் இதே கருத்தைக்கொண்டிருப்பதைப் பின்னால் தெரிந்துகொண்டேன்).

இந்த ஒரு அற்புதத்தை யார் எழுதுகிறார்கள் என்று அப்போதே நான் விசாரித்தேன்.

'வழக்கமாக எழுதுகிற மாஸ்டர்தான் இப்போதும் எழுதுகிறார்' என்றார்கள் அது உண்மைதான் என்பதும் நிச்சயமாயிற்று.

எழுதுகிற ஆள் பழைய ஆள்தான் ஆனால் அவர் இப்போது தொட்டு எழுதுகிற மைதான் - சீருடையினர் நினைவாக - புதியமை!

ஈழநாடு நிர்வாக ஆசிரியர் பதவிக்கு அணிசெய்கிற திரு ந சபாரத்தினம் என்கிற 'சபாரத்தின மாஸ்டரை' பலருக்கும் தெரியும். அவரை ஒரு நல்ல பேச்சாளனாகவோ, எழுத்தாளனாகவோ மிகச் சிலருக்குத்தான் தெரியும். அடக்கம் என்றால் மகா அடக்கம்.

அன்றைய இலக்கியக் கூட்டத்தில் மாஸ்டர்சொற்பொழிவாற்றினார் என்றோ, உரையாற்றினர் என்றோ சொல்வது தவறு அன்று நண்பர்களோடு 'கதைத்துக் கொண்டிருந்தார் என்று சொல்வதே சரியான வசனம் அவருடைய பேச்சில், காரம் இல்லை; சாரம் இருந்தது. ஆவேசமில்லை; அறிவின் நிறைவு இருந்தது அப்பப்பா, என்ன அருமையான பேச்சு! கனிவான, கருத்தான பேச்சு! சீமான் கதைப்பதை அலுக்காமல் சலிக்காமல் எவ்வளவு நேரமும் சிரித்துக் சிரித்துக் கேட்டுக்கொண்டேயிருக்கலாம்!

உலகப் பேரறிஞர்களின் தத்துவக் கருத்துக்கள், ஆங்கில இலக்கிய மேதைகளின் நயப்புகள், யாழ்ப்பாணத்து மண்ணின் ஆழமான மணம்-இவையெல்லாம் மாஸ்டருக்குள் அடக்கம். அறிவும் அனுபவமும் நிறைந்து கிடக்கும் அவரிடமிருந்து வருகிற கதைகள-பேச்சுக்கள் அறிவு ஜீவிகளுக்கு அமுதபானம்

இந்த மனிதர் ஈழநாடு தலையங்கத்தைமட்டும் எழுதிவிட்டுப்போய்விடுவதில்லை, மகா பாவம்; தமது அனுபவங்கள் கருத்துக்களைவைத்து அன்றாடம் இன்னுமொரு பந்தி (ஐயாறன் மாதிரி) எழுதினால் என்போன்ற வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும்கூட மிக உபயோகமாக இருக்கும்-ஆளை விடக்கூடாது!

## இவ்வாரம் உங்கள் பலன்

**இன்று**
மாதம்- மாசி
திகதி - 27[10 3-1985]
வாரம்: ஞாயிறு
திதி -சதுர்த்திமுன் இரவு வரை
நக்ஷத்திரம்-சித்திரைபகல் 10-16ன் மேல் சுவாதி

**மேடம்**
வாழ்க்கையில் வசந்தம் குன்றும், குடும்பத்தில் சச்சரவுகளுக்கு இடமேற்படும், இனபந்துக்கள் மத்தியிலும் இன்னல்கள் தோன்றும்.

**இடபம்**
அவப் பெயர் சேர்க்காதீர், அடுத்துக் கெடுப்பதற்குச் சிலர் முனைவர், எதிர்பார்க்கும் விடயத்தில் ஏமாற்றமடைய நேரும்.

**மிதுனம்**
பிதாவழிச் சுகக் குறைவிற்கும் இடமுண்டு பெரியவர்களின் ஆசிதாராளமாக கிடைக்கும்.

**கடகம்**
தொழில் விடயங்களில் தொல்லைகளும் எதிர்பார்க்கும் விடயங்களில் சோர்வும் உருவாகும். கருத்து மோதல்களுக்கும் இடமுண்டு.

**சிங்கம்**
வணிகர்கள் இவ்வாரம்அதிக முதலீடுகளைத் தவிர்ப்பது நன்று லாபகரமான காரியங்களில் நஷ்டங்களுக்கிடம் ஏற்படலாம்.

**கன்னி**
ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்காதீர் அயலவர்களுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

**துலாம்**
விரக்தியைத் தவிர்க்கவும், சொந்த விடயங்களில் அடுத்தவர் தலையிடுவதைத் தவிர்த்துக் கொள்ளவும், உணவு விடயத்திலும் கவனம் வேண்டும்.

**விருச்சிகம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். எதிர்பார்த்தவர்களால் ஏமாற்றம் தோன்றும், நண்பர்கள் நச்சரிப்புக்கும் இடமுண்டு.

**தனுசு**
சகோதரர்களால் கௌரவம் பாதிக்கப்படும், முன்னேற்றப் பாதையிலும் முட்டுக்கட்டைகள் தோன்றும், விடாமுயற்சி வெற்றிதரும்.

**மகரம்**
அன்னையின் ஆதரவு குறையும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அவதானம்வேண்டும். சுற்றத்தார்மத்தியில் வெறுப்பு தோன்றும்.

**கும்பம்**
செய்தொழிலில் சிரமங்கள் தோன்றும் எதிர்த்தவர்களே உறவுக்கு வருவார்கள். புதுத் தொழில் விருப்புண்டு.

**மீனம்**
திடீர்ப் பிரயாணங்களுக்கு இடமுண்டு. பாதையில் பழுதுண்டு. பகைவர்கள் பதுங்குவர் எந்த விடயத்திலும் சிந்தித்து செயலாற்றவும்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**


## 95-வது பிறந்தநாள்

### அ. சின்னப்பு

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்புத்துறை வாசியுமான திரு. அ சின்னப்பு (மலாயன் பென்சனர்) தனது 95வது பிறந்ததினத்தை புதல்வர்களான நவரத்தினராசா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), சிவஞானம், திசைவீரசிங்கம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), சிவபாதசேகரம், அகில இலங்கை சமாதான நீதவான்) திருமதி அம்பிகாரட்னம் சத்தியானந்தன் (நியூஸிலாந்து பல்கலைக்கழக கலைப்பட்டதாரி) ஆகியோருடன் அமைதியாக கொண்டாடினர். 2197

## விற்பனைக்கு

பாடசாலைகள், தேவாலயங்கள், பிரதான யாழ். பஸ்நிலையம், புகையிரத நிலையம் என்பனவற்றுக்கு வெகு அருகாமையில் அடைக்கல மாதா கோவில் பின்புறமாக ஆஸ்பத்திரி வீதியில் சுற்றுமதில், கிணறு திருநெல்வேலி குடிநீர் வசதிகளுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: தி. குகபாலன், 84, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம்.
2195

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாற்றம் பெறும் ஆசிரியர்கள்

[கொழும்பு]

கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடமாற்றம்பெற்றுள்ள ஆசிரியர்கள் விபரம் வருமாறு:-

செல்வி ஜி. கனகலிங்கம்-அக்கரபத்தன, திரு. கே. எஸ். கே. நவரத்தினம் - வவனியா, திருமதி எம். குமாரசாமி-நெடுந்தீவு, திருமதி என் பரஞ்சோதி-ஹல்எல, செல்வி பி. முனியாண்டி-மாத்தளை, திரு. ரீ தம்பிஐயா - முருங்கன், செல்வி ஏ. கந்தையா - முருங்கன், திருமதி பி. கிருஷ்ணதாசன்-பேசாலை, திரு.ஏ. கனகரத்தினம்-பசறை, திருமதி சி. கனகரத்தினம்- பசறை, திரு எஸ். கிருஷ்ணநாதன்- அப்புத்தளை, திருமதி ஆர். உருத்திரா-பூளுகல, திருமதி பி. இராமநாதன் - முல்லைத்தீவு, திரு. எஸ். சிவநாதன்-மடுகல, திருமதி கே. ஜே. வெள்ளையா-கண்டி, திரு எம்.துரைராசர்-பதுளை, திரு. ஏ நடராசா-கிதுல்கல, திரு. எம். சண்முகராசா-பன்வில, திரு. எஸ் சிவசம்பு-மாங்குளம், திரு. ஆர். வாமசிவம்-வவனியா, திரு. என். சுந்தரநடராசா - புத்தளம், செல்வி ஐ. நாகரத்தினம்-பண்டாரவளை, திருமதி கே. சிவானந்தராசா-வத்தளை, திருமதி ரீ. செல்லையா-கொழும்பு, திரு. வீ ஏ. சிவானந்தன். பொலநறுவ, திரு. எஸ். இராசரத்தினம்-பூளுகல, திருமதி கே.பி. சுந்தரம்-எட்டியாந்தோட்டை, திரு. எஸ்.ஏ பி. யேசுதாசன்-அக்கரபத்தன, திரு. ஏ. கனகரத்தினம்-பசறை, திரு. ஏ. சோமசுந்தரமூர்த்தி-மன்னார், திரு. வி.சிவசுந்தரம்-பண்டாரவளை, திரு. பி. சுவாமிநாதன் - கலவெல. திரு.எ கலகசபை கந்தளாய், என்.வி. இதயகுமாரன் கோகிலகெதள எஸ்.ஈஸ்வரமூர்த்தி நீர்கொழும்பு, எஸ். தியாகராசா கலகா தமிழ் ம.வி சலகா, பி. சிறிவிக்கினேஸ்வரன் அநுராதபுரம், செல்வி உ சிவஞானம் வெலிமட, திருமதி வி.யோகேந்திரன் விசுவமடு, செல்வி கே. சந்திராபிள்ளை மினுவாங்கொட, திருமதி.ரி. சத்தியநாதன் செட்டிகுளம், திருமதி வி. சிவலிங்கம் வவுனியா, எஸ். பத்மநாதன் வவுனியா,ஏ. முத்தையா

பண்டாரகம, திருமதி புஸ்பராணி சாமுவேல் முல்லைத்தீவு திரு.ரி.பரமநாதன் வவுனியா, செல்வி. எஸ். சுப்பிரமணியம் இரம்பொட, கே. சந்திரசேகரம் கந்தப்பளை.

## மண்டைதீவில் நடந்தது

# பழையபகை; ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

பழைய பகைமை, 3 பிள்ளைகளின் தந்தையைப்பலி கொண்டது. மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவரத்திணம் வர்ணலிங்கம்(35 வயது) என்பவரே பலியானவராவர்.

சம்பவதினம் வர்ணலிங்கம் என்பவர் தோட்டத்தில் புலையிலை வெட்டிக்கொண்டு போய் சகோதரி வீட்டில் வைத்து விட்டு தமது வீட்டுக்குச் சென்றதாகவும், எட்டுப்பேர் கொண்ட கோஷ்டியினர் வாள் கோடரி, அலவாங்கு, கத்தி போன்ற ஆயுதங்களுடன் அவரது வீட்டிற்குள் புகுந்தபோது அடுத்துள்ள அன்னலிங்கம்என்பவரின் வீட்டுக்குள் அவர் ஓடிப் புகுந்ததாகவும், ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் தொடர்ந்தும் அவ் வீட்டுக்குள் புகுந்து அவரைத் தாக்கியதுடன் மற்றும் எதிர்கொண்ட அவரின் மனைவி, தந்தை உட்பட பலரைத் தாக்கிவிட்டு அக் கோஷ்டியினர் தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

படுகாயமடைந்தவரையாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்த்ததும் அங்குஅவர் இறந்து விட்டதாகத் தெரிவிக் பட்டது.

யாழ்.நீதிமன்ற மேலதிக நீதவான் கே.பி எஸ்.வரதராஜா மரணவிசாரணை நடாத்தினார்.

மண்டைதீவைச் சேர்ந்த சந்தேகநபர்களான திருலிங்கபநடேசலிங்கம், அறிவழகன், மகேசன், குண்டன்,சிவம்,சிபாலன், அப்பன் என்பவர்களே இத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாக விசாரணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது,

# யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றோர்

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

### பயிற்றப்பட்ட மனையியல் ஆசிரியர்கள்

திருமதி எல் சிவபாதம் கிளிநொச்சி, திருமதி எஸ் வைரவநாதன் நீர்கொழும்பு, திருமதி ஜே ஏ. மரியநாயகம் இறம்பைகுக்ளம், திருமதி ஐ இலக்குமணன் கல்ஹின்ன, திருமதி ஐ செல்வராஜ் வத்தளை.

### பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியர்கள்

திரு எஸ் எம் செல்வராஜா தம்பிலுவில், திரு. ஏ ஜெயபாலரத்தினம் பூநகரி,திருமதிஎஸ் பூராணந்தன் அடம்பன், திரு கே. குலராசேந்திரம் முள்ளியவளை,

### பயிற்றப்பட்ட நுண்கலை ஆசிரியர்கள்

திரு கே ஒ லக்ஸ்மணன் கல்ஹின்ன, திருமதி ஜே அப்பலவாணர் வவனியா,திருமதி வள்ளியம்மை கதிரேசு அக்கறைப்பத்தனை.

### பயிற்றப்பட்ட கைவினை ஆசிரியர்கள்

திரு. எம் விவேகானந்தன் கொழும்பு, திரு. கே. கனகரத்தினம் கண்டசா, திரு. ஏ.கனகரத்தினம் முல்லைத்தீவு.

### பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர்

திரு. கே. செல்வகுமாரன் களுத்துறை

### பயிற்றப்பட்ட உலோகவேலை ஆசிரியர்

திரு சி எஸ் கந்தசாமி வவனியா.

### பயிற்றப்பட்ட சமூகவியல் ஆசிரியர்கள்

திரு. ஐ. சண்முகநாதன் முல்லைத்தீவு, திருமதி மாலினி வேதநாதன்யோகபுரம் திருமதி பி பரராஜசிங்கம் முல்லைத்தீவு செல்வி கே. சேதுராஜா பதுளை, திரு. ஈ. குணசிங்கம் கிளிநொச்சி.


## மரண அறிவித்தல்

### செல்வி

### அருளாச்சி இராமலிங்கம்

உடுவில் மகளிர் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை செல்வி அருளாச்சி இராமலிங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆசிரியர் ஞானசம்பந்தர் அவர்களின் சகோதரியும், காலஞ்சென்ற லலிதாதேவி பேராயிரம் பிள்ளை, சுசீலாதேவி, ஸ்ரீகாந்,(அமெரிக்கா) தெய்வேந்திரசேகரம் (கொழும்பு) பாலேந்திரா [London], இவர்களின் மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய் சேமக்காலைக்கு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுதுமலை இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். க. பேராயிரம் பிள்ளை, சுதுமலை மத்தி, மானிப்பாய். 2-03



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரீவக்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka unde Eelanadu 100236/81 Eelanadu P O. Box 49, Telegram Telephone number 22389 - 24126


## மட்டுநகரில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வீட்டில் தம்மைச் சந்தித்து உரையாடிய மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

வந்தாறுமூலை அசம்பாவிதத்தைப் பார்வையிட்ட பின்னர் நடந்த இச் சந்திப்பில், அமைச்சர் தேவநாயகமும் கலந்து கொண்டார். பிரஜைகள் குழுவில் மட்டு,திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, செயலாளர்திரு.பிரின்ஸ் காசிநாதர் உட்பட சில உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

மட்டு.நிலைமைகுறித்து செயலாளர் விளக்கினார்.

## இலங்கைத்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மா.பொ. சிவஞானம் உட்பட பல உறுப்பினர்களும் பேசினர்

சட்டசபையில் இத் தீர்மானத்தை நிதியமைச்சர் இரா நெடுஞ்செழியன் முன்மொழிந்து பேசினார். இதன் பின்னர் அவை நேற்று முழுவதும் அலுவல் எதுவுமின்றி ஒத்திப் போடப்பட்டது.

## இரத்தக்களரி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டோர், அரசியல் எதிரிகள் ஆகியோருக்கு மரண தண்டனை வழங்குமாறு உத்தரவிட்டமை, இயக்கத்துக்கு ஆட்சேர்த்தமை போன்ற பல்வேறு குற்றங்களையும் ஒப்புக்கொள்ளவுள்ளார் அத்துடன்நாட்டில் தற்போதுள்ள இரத்தக் களரியை நிறுத்துமாறும் கோரிக்கைவிடுவார் எனறும் அரசுக் குறிப்புதெரிவிக்கிறது.

## சற்றே பொறுத்திருங்கள்

# 1954ஆம் ஆண்டுக்குப்பின் பிறந்தவர்களா, நீங்கள்?

[சுண்டுக்குளி]

1954ஆம் ஆண்டுக்குப் பின் யாழ். மாவட்டத்தில் பிறந்தவர்களா நீங்கள்? அப்படியானால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை யாழ். பிறப்பு இறப்பு பெரும்பகுதிப் பதிவுக்காரர் காரியாலயத்தில் பெறுவது சிரமமான காரியம்.

1954ம் ஆண்டுக்குபின் பிறந்தவர்களுக்கான இருபக்கப் படிவங்கள் முடிவடைந்து நாட்கள் பலவாகியும் கொழும்பிலிருந்து இன்னும் வந்துசேரவில்லை. அவசர தேவைகளுக்காக விண்ணப்பித்தவர்கள் எல்லாம் இந்தப்படிவங்கள் வராததால் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

1954க்கு முன் பிறந்தவர்களுக்குப் பிரச்னையில்லை. ஒரு பக்கப் படிவத்திற்குத் தட்டுப்பாடில்லை.

## சர்வதேச....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருப்பதாகவும் இதனால் இந்தியாவுக்கு சுமை அதிகரித்துருப்பதாகவும் கூறியிருப்பதாகதிரு. மெட்டோபட் தெரிவித்தார்.

## கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிடங்கள் சேதமுற்றுஅழிந்தும் போயின. நேரம் அதிகாலையை நெருங்கியதால் எமது தாக்குதலை இடைநடுவில் நிறுத்தவேண்டிஏற்பட்டது ஆனால் சிறிலங்கா ராணுவத்தினரின் பலத்த மோட்டார் குண்டுத் தாக்குதலின் மத்தியில் 5மணி நேரம் போராடி 75க்கு மேற்பட்ட சிறிலங்கா ராணுவத்தினரை கொன்று பலரை படுகாயமுறச் செய்தது மாத்திரமல்லாமல் இத்தாக்குதலில் ஈடுபட்ட எமது மக்கள் விடுதலைப் படைத் தோழர்கள் எந்தவித சேதமுமின்றி முகாமுக்குத் திரும்பியதானதுஎமக்குக்கிடைத்த பெருவெற்றியாகும.

## உலக சாம்பியன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னத்தில் ஆரம்பமாகின்றது. இந்த மோதலினால் தற்போதைய உலகச் சம்பியனான இந்தியா பாகிஸ்தானை எதிர்த்து விளையாடும். (வி)

## அன்னையர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பினர்களும் இதில் கலந்து கொண்டனர். இதனையொட்டி சர்வதேசப் பெண்கள் தின நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த குழுவினருக்கு அன்னையர் முன்னணி செய்தி அனுப்பியுள்ளது.

பொலிஸ் அனுமதியின்றிக் திருமதி விவியன் தலைமையில் நடந்த இவ்வூர்வலம் பொலிஸ் கண்ணீர் புகையினால் கலைக்கப்பட்டது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

தீயணைக்கும் இயந்திரப்பாதுகாப்பு, பராமரிப்பு, யூனிசெவ் திட்ட அமுலாக்கல், நகரவீதி திருத்த வேலைகள், நகர சுத்திகரிப்பு ஆகிய சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை நல்லூர் இந்துவிடுதி மண்டபத்தில் மாநகர ஆணையாளர் திரு சி வி கே சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது. (மா)

## பாண்டிச்சேரிக்கு பாருக்மரைக்கார் முதல்வர்

(புதுச்சேரி)

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் இந்திரா காங்கிரஸ் கட்சி சட்ட மன்றக் குழுத் தலைவராக முன்னாள் முதலமைச்சரும் கலைக்கப்பட்ட சட்டசபையின் சபாநாயகரு எம் ஓ எச் பாருக் மரைக்கார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் விரைவில் முதலமைச்சராக பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.

## 2லட்சம் சிங்களவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''பயங்கரவாதத்தினால் தற்போது நாடு முழுவதிலும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வட பகுதியில் பெருமளவு சிங்கள மக்குடியமர்த்தப்படவுள்ளார்கள். இம்மக்களுக்கு ராணுவ பயிற்சியும், விவசாய மற்றும் தொழி பயிற்சிகளும் அளிக்கப்படும் என்றார்.

## ராமராவ் பதவி ஏற்றார்

[ஹைதராபாத்]

ஆந்திராவில் முதலமைச்சர் திரு என் டி. ராமராவ் தலைமையிலான 24 பேர்கொண்ட அமைச்சரவை நேற்று பதவி ஏற்றுக்கொண்டது. இதில் 16 பேர் அமைச்சர்களாகவும் ஏனையோர் ஸ்டேட் அமைச்சர்களாகவும் பதவி ஏற்றனர்.

## வேலணையில் கரையொதுங்கிய சடலம்

[வேலணை]

வேலணை தெற்குக் கடற்கரையில் உருக்குலைந்த நிலையிலான ஆணின் சடலமொன்று ஒதுங்கியது.

சடலம் ஒதுங்கியசெய்தியறிந்த பலபொதுமக்கள் சடலத்தைப் பார்வையிட்டுச் சென்றனர்.

## யாழ். நவீன சந்தையில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தைக் கட்டிடத்திலுள்ள தனியார் ஸ்தாபனம் ஒன்றிலிருந்து சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு யாழ். நவீன சந்தையின் மேல் மாடியிலுள்ள தனியார் ஸ்தாபனத்திலேயே இக் கொள்ளை நடைபெற்றுள்ளது.

ஸ்தாபனத்தின் அலுவலக ஜன்னலை அகற்றிவிட்டு உட்புகுந்த இனந்தெரியாத கோஷ்டி 9 தொலை பேசிகள், போட்டஸ்டாட் ஆங்கில தட்டச்சு இயந்திரம் மற்றும் ரேடியோக்கள், கல்குலேட்டர், மணிக்கூடு, அயன் பொக்ஸ் ஆகிய மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச்சென்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## பிளாஸ்ரிக் படகு கடத்தப்பட்டது!

(காரைநகர்)

காரைநகர் சீநோர் நிறுவனத்தில் பிளாஸ்ரிக் இயந்திரப் படகொன்று இனந்தெரியாதவர்களினால் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்டது

20,000 ரூபா பெறுமதியான இப்படகு திருத்தம் செய்வதற்காக இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தனியார் ஒருவருடைய படகாகும்.